ISSN 1391-9504

# விஜய்

Vijey විජයි

04.08.2010 - மலர் 07, இதழ் 22




## தொடர்பாடலில் அச்சுக்கலை

## பழங்குடி மக்களின் வாழ்க்கை வரலாறு

## இலங்கையில் 'பஸ்' சேவையின் ஆரம்பம்

## நீர் யானையின் வாழ்க்கை வட்டம்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கண்டிப் பிரமுகர்களின் நிர்ப்பந்தங்களை ஆள்பதி பொருட்படுத்தவில்லை. ஒப்பந்தங்கள் எதுவும் இல்லாமல் அனைத்து விடயங்களும் செவ்வனே நடைபெறுவதே அதற்கு காரணமாகும். இவை தவிர, மேலதிகமாக ஏதும் புதிதாக நடைமுறைபடுத்த அவர் விரும்பவில்லை. எனினும், அதனை அவர் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. அப்படிச் செய்தால் வெறுப்பைச் சம்பாதிக்க வேண்டி வரும் என்ற அச்சமே காரணமாகும். மன்னனுக்கு உதவி செய்கையிலும் அவரைத் திருப்திப் படுத்தும்பொழுதும் கவனமாகச் செயற்படும்படி ஒல்லாந்த உயர் அதிகாரிகளிடம் இருந்து ஆள்பதிக்கு ஏற்கனவே அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. மன்னனின் சேவையாளர்கள், 'இராஜ ராஜனின் கோட்டை' போன்ற சொற்பதங்களைப் பயன்படுத்துவது தமக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என ஒல்லாந்த அதிகாரிகள் சிந்தித்தனர். அதனால், அச்சொற்களை பேசும்போது தவிர்த்துக்கொள்ளும்படி ஆணையிட்டனர். மன்னனின் சில பலவீனங்களையும் ஒல்லாந்தர் நன்றாகவே அறிந்து வைத்திருந்தனர்.

## கொழும்பில் உணவுத் தட்டுப்பாடு

இதற்கிடையில், துறைமுகங்களை திறந்துவிட்டதால் ஒல்லாந்த வர்த்தக சங்கம் துறைமுகங்கள் ஊடாக மேற்கொண்ட வர்த்தகம் அனைத்தும் வீழ்ச்சி அடைந்தன. அது வர்த்தக சங்கத்திற்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தியது. மன்னனுக்குரிய பிரதேசங்களில் இருந்து மிகவும் சொற்ப அளவே பாக்கு கிடைத்தது. கொழும்பிலிருந்து கண்டிக்குக் கொண்டு சென்ற உப்பு மற்றும் பருத்தி ஆடை ஆகியவற்றின் விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. வர்த்தகம் புரிவதற்காக மக்களைப் புத்தளத்திற்கு செல்வதற்கு மன்னன் ஆணையிட்டான் என்ற பிரசாரம் நாடு முழுவதும் பரவியது. மன்னனின் இந்த ஆணை காரணமாக பாதுகாப்பைப் பலப்படுத்தும் பொருட்டு எல்லைகளில் காவல் நடவடிக்கைகள் பலப்படுத்தப் பட்டன. இதன் காரணமாக கோட்டையில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அறிகுறிகள் தென்பட்டன. இதற்கிடையில், ஆள்பதி கெரிட்த ஹீர் அவர்கள் காலமானார். நாட்டின் நிர்வாகம் மந்திரி சபை எனும் அமைச்சர் பேரவையிடம் கையளிக்கப்பட்டது. கண்டியின் தலைமைப் பிரதானி ஆள்பதியின் மரணம் குறித்து அனுதாப செய்தியை வழங்க கொழும்பிற்கு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2010, தரம் 1 பாடசாலை அனுமதி:

# அநீதிகளுக்கு இலக்கான பிள்ளைகளுக்கு வேறு பாடசாலைகளை வழங்கத் தீர்மானம்



அரசாங்கப் பாடசாலைகளில் 2010 ஆம் ஆண்டில் தரம் 1 இற்கு அனுமதியைப் பெறுவதற்காக விண்ணப்பித்து, கேட்கப்பட்ட பாடசாலை கிடைக்காத மற்றும் அநீதிகளுக்கு இலக்கான சுமார் 350 பிள்ளைகளுக்கு வேறு பாடசாலைகளில் அனுமதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, குறித்த பிள்ளைகளுக்கு தகைமைகளின் அடிப்படையில் கிடைக்க வேண்டிய பாடசாலையில் அனுமதியைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரித்துள்ளார்.

அரசாங்கப் பாடசாலையொன்றில் தரம் 1 இற்கு மாணவர்களை அனுமதித்துக் கொள்ளும்போது, அநீதிகளுக்கு இலக்காகியிருப்பின், அது தொடர்பில் பெற்றோர் மேன்முறையீடுகளைச் செய்வதற்கு கல்வி அமைச்சு சந்தர்ப்பம் வழங்கியிருந்தது. அதன்படி, சுமார் 1500 மேன்முறையீடுகள் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவருக்கேனும் பாடசாலை அனுமதியைப் பெற்றுக்கொள்வதில் அநீதி இழைக்கப்பட்டிருக்குமாயின், சட்டரீதியாக நிரூபிக்கப்படக்கூடியவற்றை மட்டும் ஆராய்ந்து, அந்தத் தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

எனினும், கல்வி அமைச்சுக்குக் கிடைக்கப்பெற்ற ஏராளமான மேன்முறையீடுகளில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் சட்டரீதியாக நிரூபிக்க முடியாதவையாக இருந்தமையால் அத்தகையவை நிராகரிக்கப்பட்டதாகவும் அவை குறித்து விளக்கமளித்து பெற்றோர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 'சேகரிப்போம் சுவீகரிப்போம்' பரிசுப் போட்டி

* பாடசாலை பேக்ஸ்,
* டீ-ஷேர்ட்ஸ்,
* டீ-மக்ஸ்,
* கெப்ஸ்களை

வெல்லுங்கள்!



இலங்கை வரைபடமானது பன்னிரெண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு வாரத்திலும் பிரசுரிக்கப்படும். அவ்வாறு வாராவாரம் பிரசுரிக்கப்படுகின்ற பகுதிகளை தொடர்ச்சியாக சேகரித்து வாருங்கள். பன்னிரெண்டு பகுதிகளையும் சேகரித்த பின்னர், இலங்கையின் வரைபடம் முழுமைப்படும் வகையில் அவற்றை ஒழுங்கமைத்து-தபால் அட்டையில் ஒட்டி-எமக்குத் தபாலிட்டு பரிசுகளை சுவீகரித்துக்கொள்ளுங்கள். முழுமைப்படுத்தப்பட்ட வரைபடத்தை தபாலிட வேண்டிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 011-2479653 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

### வெற்றி பெறுவோருக்கான பரிசுகள்

10 பேருக்கு - பாடசாலை பேக்ஸ் (School bags)
15 பேருக்கு - டீ-ஷேர்ட்ஸ் (T-Shirts)
100 பேருக்கு - கெப்ஸ் (Caps)
100 பேருக்கு - டீ-மக்ஸ் (Tea mugs)

### விதிமுறைகள்

- ஒருவர் எத்தனை தபாலட்டைகளையும் அனுப்பலாம்.
- முழுமைப்படுத்திய வரைபடத்தை தபாலட்டையில் மாத்திரமே அனுப்புதல் வேண்டும்.
- தபாலுறையில் அனுப்புபவை நிராகரிக்கப்படும்.
- நிழற்பிரதிகள் (Photo copy) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இந்த வார பாகம் இல: 4




# பாடசாலையை சுத்தப்படுத்துவதற்காக 30 நிமிடங்கள் வீதம் ஒதுக்குமாறு ஆலோசனை



ஒவ்வொரு வாரமும் ஒரு நாளைக்கு 30 நிமிடங்கள் வீதம் இரண்டு தினங்களை பாடசாலையை சுத்தப்படுத்துவதற்காக ஒதுக்கிக்கொள்ளுமாறு கல்வி அமைச்சு சகல பாடசாலை அதிபர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளது.

அதன்படி, திங்கட்கிழமை மற்றும் வியாழக்கிழமை ஆகிய இரண்டு தினங்களில் ஒரு நாளைக்கு 30 நிமிடங்கள் வீதம் பாடசாலையை சுத்தப்படுத்துமாறு கல்வி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.

இதன்போது, டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களை சுத்தப்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குமாறும் அதற்காக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஒத்துழைப்புடனான வேலைத்திட்டங்களை செயற்படுத்துமாறும் கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ள ஆலோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Vijey விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# இடநெருக்கடியைத் தவிர்க்கும் சலவை இயந்திரம்





துணியைத் துவைத்து, உலர்த்தித் தரும் சலவை இயந்திரத்துக்குப் பொதுவாக வீட்டில் அதிக இடம் தேவைப்படுகின்றது. இதற்கு மாற்றுவழியாக சுவரில் தொங்கவிடக்கூடியதும் குளியலறை அலுமாரியிலோ அல்லது குளியலறை சின்க்கிற்கு அடியிலோ வைக்கக்கூடியதுமான சலவை இயந்திரமொன்றை 'ஷைன்' நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த சலவை இயந்திரத்தின் கதவில் வட்டவடிவ ஒளிவிளக்கு ஒன்று இருக்கிறது. அந்த விளக்கானது துணி துவைக்க ஆரம்பிக்கும்போது வட்டத்தின் தொடக்க எல்லையிலிருந்து எரிய ஆரம்பித்து, துவைத்து முடியும் தருவாயில் அதன் முடிவு எல்லையை வந்தடையும். எனவே, இதனூடாக துணி துவைக்கப்பட்டுவிட்டது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். இந்த சலவை இயந்திரம் பாவனைக்கு இலகுவானதும் உகந்த முறையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## சிறுவர் துன்புறுத்தல்:

# 6 மாதங்களில் 600 முறைப்பாடுகள்



பல்வேறுபட்ட துன்புறுத்தல்களுக்கு இலக்காகின்ற சிறுவர்கள் தொடர்பாக ஆறு மாதகாலங்களுக்குள் சுமார் 600 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் நாளொன்றுக்கு இவ்வாறான சுமார் 8 முறைப்பாடுகள் கிடைப்பதாகவும் சிறுவர் மற்றும் நன்னடத்தைத் திணைக்கள ஆணையாளர் சரத் அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் இடம்பெறும் தாக்குதல், வீடுகளில் பெரியோர்களால் மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல், சிறுவர்களை வீட்டு வேலைகளில் அமர்த்துதல் என்பன தொடர்பிலேயே பெரும்பாலான முறைப்பாடுகள் அமைவதாகவும், அந்த முறைப்பாடுகள் அனைத்தையும் உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்து-விசாரணைகளை நடாத்தி- அவ்வாறு துன்புறுத்தல்களை மேற்கொள்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அநாதரவான பெற்றோர்கள் தொடர்பில் முறைப்பாடுகள் அதிகரிப்பு



பிள்ளைகளால் தெருவில் அநாதரவாகக் கைவிடப்படுகின்ற வயோதிப பெற்றோர்கள் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகள் அதிகரித்து வருவதாக சமூக சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களில் மட்டும் இது தொடர்பில் சுமார் 100 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் வாரந்தோறும் குறைந்தது இரண்டு முறைப்பாடுகளேனும் கிடைப்பதாகவும் மேலும் அறியக்கிடைக்கின்றது.

நடக்க முடியாமல் அவதிப்படும் இத்தகைய வயோதிபர்கள் தெருவிலும் பஸ் தரிப்பிடங்களிலும் விழுந்து கிடந்த நிலையில், வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்த சம்பவங்களும் அண்மையில் நடந்துள்ளன.

அத்துடன், மிக மோசமான நிலையில் உள்ள ஏராளமான வயோதிப பெற்றோர்கள் அநாதரவான நிலையில் வைத்தியசாலைகளில் தங்கியிருப்பதாகவும் அவர்களுக்கென விசேட வயோதிப இல்லத் திட்டமொன்றை ஆரம்பிப்பது தொடர்பில் சமூக சேவைகள் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் 09 ஆம் திகதி சர்வதேச ஆதிவாசிகள் தினம் குறித்த விசேட கட்டுரை

# பழங்குடி இனமக்கள் வாழ்க்கை



நாளும் பொழுதும் உலகம் தொழில்நுட்ப வளர்ச்சியிலும் விஞ்ஞான அறிவிலும் வியத்தகு சாதனைகளைப் புரிந்த வண்ணமே இருக்கின்றது. இதன் விளைவு, மனிதர்கள் ஆதிகால வன வாழ்க்கையில் இருந்து விடுவித்து நாகரிக உலகிற்கு வேகமாக இட்டுச் சென்றது. இதனால், இன்றைய மனிதன் இயற்கைச் சூழலுடன் நெருங்கிய பிணைப்பில் இருந்து விலகி வெகு தூரம் சென்றுவிட்டான். அவனால் இயற்கைச் சூழலை மிகச்சொற்ப அளவே பாதுகாக்கக்கூடியதாக இருக்கின்றது.

எனினும், இம்மாற்றங்களுக்கு உட்படாமல் சூழலுடன் இணைந்து பாரம்பரிய வாழ்க்கை முறையுடன் வாழும் மக்கள் கூட்டத்தினர் இன்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழத்தான் செய்கிறார்கள். தங்களின் பூர்வீக பிரதேசங்களில் கூடி வாழும் இவர்களையே நாம் 'பழங்குடியினர்' என அழைக்கின்றோம். இவர்களும் எம்மைப் போல் உரிமைகள் அனைத்தும் உள்ள மனிதர்கள்.

இதனாலேயே ஐக்கிய நாடுகள் சபை 1994 இல் ஒன்றுகூடி உலகில் வாழும் ஆதிவாசிகளுக்காக ஒரு தினத்தை ஒதுக்கியது. அதன்படி ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி 'உலக பழங்குடியினர் தினம்' என ஒதுக்கப்பட்டு அதற்கென பல வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டு கொண்டாடப்படுகின்றன.

பழங்குடியினருக்காக ஐக்கிய நாடுகள் சபை 1994 ஆம் ஆண்டு 10 வருட திட்டத்தை பிரகடனப்படுத்தியது. அதுமட்டுமல்ல; அவர்களின் நன்மை கருதி மேற்குறிப்பிட்ட 10 வருடத்திற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவு செய்தது என்பது முக்கிய அம்சமாகும்.

## பழங்குடியினரின் பாதுகாப்பு

மீண்டும் 2005 இல் பழங்குடியினரின் நன்மைக்காக அடுத்த பத்தாண்டுத் திட்டத்தை ஆரம்பித்து அவர்களின் பாதுகாப்பு, சமாதானம் என்பனவற்றை உறுதிப்படுத்தவும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஐக்கிய நாடுகள் சபை மிகத் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றது. பழங்குடியினரின் கலாசாரம், சுகாதாரம், கல்வி மற்றும் அவர்களின் உரிமைகள் என்பனவற்றை உயர்நிலையில் பேணிப் பாதுகாப்பது சம்பந்தமாகவும் அதனை அபிவிருத்தி செய்யவும் ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன், அவர்களின் சூழல் பாதுகாப்பு, சமூக மேம்பாடு, பொருளாதார நிலை என்பனவற்றை உயர்ந்த மட்டத்திற்குக் கொண்டுவருவது ஐக்கிய நாடுகள் சபையின் இலக்குகளில் ஒன்றாகும்.

## 300 மில்லியன் பழங்குடியினர்

உலகில் இன்று ஏறக்குறைய 300 மில்லியன் பழங்குடியினர் வாழ்வதாக நம்பப்படுகின்றது. இவர்கள் பல்வேறு நாடுகளில் வாழ்கின்றனர். இத்தொகையானது உலக மொத்த சனத்தொகையில் 5.7% ஆகும். இலங்கையில் 'வேடர்களே' பழங்குடியினர் என கருதப்படுகின்றனர். இவர்கள் பதுளை மாவட்டத்தில் மகியங்கனைப் பகுதியில் வெல்லச எனும் இடத்திலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் வாழ்கின்றனர். எமது அயல் நாடான இந்தியாவில் மட்டும் அதன் மொத்த சனத்தொகையில் ஏறக்குறைய 10% மானோர் பழங்குடியினர். இங்கு ட்ரைபா பெல்ட் (Triba Belt) எனும் பெயரிலும் பல்வேறு பிரதேசங்களில் இவர்கள் பரந்து வாழ்கின்றனர்.

ஆபிரிக்க கண்டத்தின் மத்திய மற்றும் மேற்குப் பகுதிகளில் வாழும் பிக்மிஸ் (Pygmies) மற்றும் நாயர் ஆகிய பழங்குடியினர் மிகப் பிரபல்யம் பெற்றவர்கள். மத்திய ஆபிரிக்க குடியரசின் தென்முனையில் 'அக்கா' எனும் பழங்குடியினர் வாழ்கின்றனர்.

## 'அக்கா' ஆதிவாசிகளின் திறமைகள்

குறிப்பிட்டுச் சொல்வதாயின் 'அக்கா' ஆதிவாசிகள் வாழும் பிரதேசம் கெமரூன் நாட்டிற்கும் கொங்கோ குடியரசிற்கும் இடையில் உள்ளது. அடர்ந்த காடுகளில் வாழும் 'அக்கா' ஆதிவாசிகள் குள்ளர்கள். இவர்களைப் போலவே ஆபிரிக்காவின் மற்றொரு ஆதிவாசிகளாகிய 'பிக்மிஸ்' இனத்தவர்களும் குள்ளர்களே. இவர்களின் சராசரி உயரம் 5 அடிக்கும் குறைவாகவே இருக்கும். 'அக்கா' ஆதிவாசிகள் பல அரிய மூலிகைகள் பற்றியும் அதன் மூலம் நோய்களைக் குணமாக்கும் திறனும் கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவின் பூர்வீக குடிகளாக செவ்விந்தியர்கள் (Red Indians) விளங்குகின்றனர். இவர்களும் அவுஸ்திரேலியாவின் 'எபோர்ஜின்கள்', அமெரிக்கா கண்டத்தின் வடதுருவத்தில் பனி வலயத்தில் வாழும் 'எஸ்கிமோவர்' ஐரோப்பாவின் வடதுருவத்தில் வாழும் 'லாப்பியர்' முதலானோர் புகழ்பூத்த பழங்குடியினராவர். இவர்களை First Nation அதாவது 'மூத்த குடிகள்' என்றே அந்நாட்டு மக்கள் அழைக்கின்றனர்.

## உயரிய பரிசு பல வென்ற பழங்குடியினர்

இயற்கைச் சூழலை மனிதன் மிக வேகமாக அழித்து வருவதும் பல்வேறு நாடுகள் இயற்கைச் சூழல் சம்பந்தமாக எடுக்கும் முடிவுகளும் நடைமுறைப்படுத்தும் கொள்கைகளும் பழங்குடியினருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. தேசங்களுக்கிடையேயும் நாடுகளுக்குள்ளே காணப்படும் பிரதேச எல்லைப் பிரச்சினைகளாலும் அவர்கள் படும் துன்ப, துயரங்கள் சொல்லுந் தரமன்று. யுத்தம் காரணமாக ஏற்படும் முரண்பாடுகள் அதனால் ஏற்படும் விளைவுகளாலும் அவர்கள் படும் துன்பங்கள் முடிவேயில்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. குறைந்த கல்வி, குறைவான சுகாதார வசதிகள், ஏழ்மை போன்றவற்றால் உலகெங்கும் வாழும் பழங்குடியினர் மிகக் கஷ்டமான வாழ்க்கையை அனுபவிக்கின்றனர்.

எனினும், தாம் பழங்குடி வம்சாவளிக்கு உரித்துடையவராக வாழ்ந்து தமது திறமைகளை ஆயுதமாக்கி உலகில் மேலான நிலைக்கு வந்த சில பழங்குடியினரும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவுஸ்திரேலியாவின் பிரபல மெய்வல்லுனர் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீராங்கனையான ஸ்ரீமன் அதற்குச் சிறந்த உதாரணமாகும். குவாட்டமாலா நாட்டின் 'மாயா' எனும் பழங்குடி வம்சத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆதிவாசிப் பெண்ணாகிய ரிகொபட்டா வெஞ்சு என்ற நாவல் எழுத்தாளர் தனது அனுபவங்களை முன்வைத்து தான் எழுதிய நாவலொன்றின்மூலமே உலக மக்களை பழங்குடியினர் பக்கம் கவனத்தைச் செலுத்தத் தூண்டினார். இதன் காரணமாக, அவர் 1992 ஆம் ஆண்டுக்குரிய 'நொபெல்' பரிசையும் பெற்றார்.

## ஆதிவாசிகள் தினம்

ஆதிவாசிகளாகிய பழங்குடியினர் எம்மை விடப் பாரிய பிரச்சினைகள் பலவற்றிற்கு முகம் கொடுக்கின்றனர். எனினும், அவர்களைக் குறைத்து மதிப்பிட எமக்கு எவ்வித உரிமையும் இல்லை. மிகவும் உயர்வான பழக்கவழக்கங்களையும் பெறுமதி மிகுந்த சம்பிரதாயங்களையும் சிறந்த அறிவுக்கூர்மையையும் சங்கீதம், நடனம் உள்ளிட்ட பல்வேறு கலைப்படைப்புகளையும் அவர்கள் மத்தியில் காணலாம். அதனால், அவர்களின் தனித்துவத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உலகம் முன்வர வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ)







## உலகின் பல்வேறு ஆதிவாசிகளின் விபரம்

**ஆபிரிக்க கண்டம்**

01. பிக்மிஸ் மக்கள் - மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்கா
02. அக்கா ஆதிவாசிகள் - மத்திய ஆபிரிக்க குடியரசு
03. மசாய் மக்கள் - கென்யா, தன்சானியா
04. ரூபா கோத்திரம் - சூடான்
05. ஒஜியெக் - கென்யா
06. பபர் - வட ஆபிரிக்கா
07. டுவாரெக் - கிழக்கு சஹாராவைச் சூழ்ந்த ஆபிரிக்க நாடுகள்
08. பக்கா - கெமரூன்
09. ஒகொத்தி மக்கள் - நைஜீரியா

**வட தென் அமெரிக்க கண்டங்கள்**

01. ஹவாய் தீவு வாசிகள் - ஹவாய் தீவு
02. டைனோ கோத்திரம் - கரிபியன் தீவுகள்
03. ஹைபா - பசுபிக் வலய நாடுகள்
04. இனு - கனடா
05. கினியுட் (எஸ்கிமோவர்) கனடா, அலஸ்கா, கிறீன்லாந்து
06. சுதேச அமெரிக்கர் - ஐக்கிய அமெரிக்கா
07. கனடிய ஆதிவாசிகள் - கனடா
08. தகு ஆ - மெக்ஸிக்கோ
09. அவா - அமேசன் மழைக்காடுகள்
10. அயோரா - பராகுவே, பெலிவியா
11. யோரா - அமேசன் மழைக்காடுகள்

**ஆசியாக் கண்டம்**

01. திபெத் மக்கள் - மத்திய ஆசியா
02. அய்னு மக்கள் கூட்டம் - ஜப்பான்
03. தாய்வான் பழங்குடிகள் - தாய்வான்
04. வட ரஷ்ய ஆதிவாசிகள் - சைபீரியா, ரஷ்யா
05. நாக கோத்திரங்கள் - வட இந்தியா.
06. அந்தமான் தீவுக் கூட்டத்தினர் - அந்தமான் (இந்தியா)
07. நிக்கோபார் கோத்திரத்தார் - நிக்கோபார் (இந்தியா)
08. பில் பழங்குடியினர் - இந்தியா
09. கொண்டி பழங்குடியினர் - இந்தியா
10. காசிஸ் பழங்குடியினர் - இந்தியா
11. டிரிபுரி பழங்குடியினர் - இந்தியா
12. முண்டா பழங்குடியினர் - இந்தியா
13. வேடர்கள் (இலங்கை ஆதிவாசிகள்) - இலங்கை
14. சேவாங் - பிலிப்பைன்ஸ்
15. வசாயே - மின்டனவோ தீவு
16. சிரியெக் - மத்திய கிழக்கு நாடுகள்

**ஆர்ட்டிக் கண்டம்**

01. இவெங்க வர்க்கத்தினர் - சைபீரியா
02. சுக்சி - ரஷ்யா
03. கெனட் - ரஷ்யா

**ஐரோப்பாக் கண்டம்**

01. பஸ்துயிஸ் - ஸ்பெயின்
02. சாமி - வட நோர்வே, மேற்கு ரஷ்யா
03. கொமி - ரஷ்யா
04. வெப்செஸ் - மேற்கு ரஷ்யா
05. இன்சிரியர் - மேற்கு ரஷ்யா

**அவுஸ்திரேலியாக் கண்டம்**

01. அவுஸ்திரேலிய எபோரிஜியன்கள் - அவுஸ்திரேலியா
02. பபுவா மக்கள் கூட்டம் - பபுவா நியூகினி
03. மட்ரி இனத்தவர்கள் - நியூஸிலாந்து
04. சமுவா ஆதிவாசிகள் - சமுவா
05. பிஜி மக்கள் கூட்டத்தினர் - பிஜி (Fiji)
06. டொன்கா இனத்தினர் - டொன்கா
07. மொரியோரி - சதாம் தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெகா மெஜிக் சாகஸம்





கேரள முதலமைச்சர் வி.எஸ்.அச்சுதானந்தனுடன் ஹுடினோ.



கேரள சங்கீத நாடக அகடமி விருது பெறல்.

இந்தியாவின் பிரபல மெஜிக் மாயாஜால சாகஸ மன்னன் என்று புகழ் பெற்ற பிரதீப் ஹுடினோவின் மெஜிக் சாகஸ நிகழ்வுகள் இம்மாதம் (ஒகஸ்ட்) 14 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஒரு மாத காலத்திற்கு இலங்கையின் பல்வேறு பகுதிகளில் நடைபெறவிருக்கின்றன. இதுவரை காலம் நாம் பார்த்த மெஜிக் சாகஸங்களில் இடம்பெறாத பல புதிய சாகஸங்களை ஹுடினோவின் சாகஸங்களில் பார்த்து மகிழலாம்.

ஏற்கனவே அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி, சுவிஸ் மற்றும் ஆபிரிக்கா, மத்திய கிழக்கு, கிழக்காசிய நாடுகள் உட்பட உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்று தன்னுடைய சாகஸ மாயாஜால நிகழ்வுகளால் மக்களை வியக்க வைத்த ஹுடினோவின் மெஜிக் சாகஸங்களை முதல் தடவையாகப் பார்த்து மகிழும் வாய்ப்பு இலங்கை மக்களுக்கும் கிடைக்க இருக்கிறது.

ரயில் தண்டவாளத்தில் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு ரயில் மிக அருகில் வரும்வேளை அதிலிருந்து விடுபட்டுத் தப்புதல், கண்களைக் கட்டிக்கொண்டு ஒரேநாளில் 450 கிலோமீற்றர் தூரம் மோட்டார் சைக்கிளில் ஓடுதல் நீருக்குள்ளிருந்து சாகஸம், திறந்த வெளியில் கயிற்றில் சாகஸம் என்பன அவர் நிகழ்த்திய பல்வேறு துணிச்சல் மிக்க மாயாஜால சாகஸங்களில் சிலவாகும். இன்னும் அலடின்ஸ் விநோதப் பெட்டி, சீன மெஜிக், எகிப்திய மம்மி மர்மம், இந்திய யோகி மெஜிக், மர்மமாக மறைதலும் வியப்புக்குரிய மீண்டும் தோன்றுதலும், இல்லாத இடத்திலிருந்து விலங்குகள், பறவைகளை தோன்றச் செய்தல் என்பனவும் இவரின் மெஜிக் மாயாஜாலத்தில் சிலவாகும்.

இதுவரை நாம் பார்த்த மெஜிக் சாகஸங்களில் பெண் ஒருவரை இரண்டு துண்டுகளாக வெட்டும் நிகழ்வைப் பார்த்திருக்கிறோம். ஹுடினோவின் மெஜிக் சாகஸத்தில் அவர் தன்னைத்தானே இரண்டாக வெட்டும் மெஜிக் சாகஸத்தைக் கண்டு மகிழலாம். இவ்வாறு பல்வேறு மெஜிக் சாகஸ நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.



வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் ஒகஸ்ட் 14 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையும், யாழ்ப்பாணம் நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் ஒகஸ்ட் 25 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 7 ஆம் திகதி வரையிலும், கண்டி புனித அந்தோனியார் மண்டபத்தில் (ரமழான் பண்டிகைக்காலம்) செப்டெம்பர் 10, 11, 12 ஆம் திகதிகளிலும் மற்றும் புத்தளம், மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, திருகோணமலை, வவுனியா ஆகிய இடங்களிலும் இந்த மெஜிக் சாகஸ மாயாஜால நிகழ்வுகள் இடம்பெறும்.

தமிழ்நாடு சேலத்தில் 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி 5 ஆம் திகதியன்று ஹுடினோ மெய்சிலிர்க்க வைக்கும் சாகஸமொன்றை நிகழ்த்திக் காட்டினார். இவருடைய தலை முதல் கால் அடிப்பாகம் வரை உருக்கு சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்தன. இந்த சங்கிலிகள் பதினாறு பூட்டுக்களால் பூட்டப்பட்டிருந்தன. அவற்றில் ஐயாயிரம் சக்திமிக்க பட்டாசுகளும் கட்டப்பட்டிருந்தன. இந்த நிலையில் கொளுந்து விட்டெரியும் நெருப்புக்குவியலுக்கு மேல் கொக்கியில் ஹுடினோ தலைகீழாகத் தொங்க வைக்கப்பட்டு நெருப்பில் போடப்படும் சாகஸ நிகழ்வு பார்த்துக் கொண்டிருந்தவர்களை பீதியில் உறையச் செய்தது. சில விநாடிகளில் இந்த சாகஸம் நிகழ்த்தப்பட்டது.

1999 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 9 ஆம் திகதியன்று ஹுடினோ கயிற்று மெஜிக் சாகஸமொன்றை நிகழ்த்திக் காட்டினார். 'ஏசிய நெட்' தொலைக்காட்சியின் ரெக்கோர்ட் கெலரியில் சேர்க்கப்பட்ட முதலாவது மெஜிக் அம்சம் இதுவேயாகும். இந்நிகழ்வு முதன்முதலாக 1999 ஒகஸ்ட் 26 ஆம் திகதியன்று ஒளிபரப்பப்பட்டது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் யானையைக் கண்
# அச்சமடைய வேண்ட



## மொன்டிநீக்ரோ மிருகக்காட்சிசாலையில் இருந்து வந்த நீர் யானைகளால் அல்லோல கல்லோலம்

ஐரோப்பிய நாடான மொன்டிநீக்ரோவின் தலைநகரான பொட்கோர்சியாவில் அண்மையில் கடும் மழைப் பொழிவு ஏற்பட்டது. அதனால் மிக விரைவாகவே அந் நகரம் நீரில் மூழ்கியது. அத்தரஸ்கதார் கிராம மக்கள் கடும் வெள்ளம் காரணமாக மூழ்கிய தமது வீடுகளுக்கும் விவசாய நிலங்களுக்கும் என்ன நிகழ்ந்தது என்பதைக் கண்டறிய முனைந்தனர். இவ்வாறான நிலையில் ஒரு பெண் அவரது வீட்டுத் தோட்டத்தில் இரண்டு மலைக்குன்றுகள் ஏற்பட்டிருப்பதைக் கண்டு வியப்படைந்தார்.அந்த இரண்டு குன்றுகளும் அசைவதைக் கண்ட அவர் மேலும் பீதியடைந்தார். ஆனால், அந்நாட்டின் தனியார் மிருகக்காட்சிசாலையில் இருந்து வெளியே தப்பிவந்த நீர் யானை ஜோடிகள் அவை என்று பின்னர் அவர் அறிந்து கொண்டார். அதுபற்றி மேலும் அவர் விபரிக்கையில்...

''நீர் யானைகள்தான் அங்கிருந்தன என்பதை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவற்றைக் கண்டவுடன் எனது குழந்தைகள் நன்கு பயந்து நடுங்கிவிட்டனர். ஐரோப்பியக் காடுகளில் நீர் யானைகள் இல்லை. அவை ஆபிரிக்காவைச் சேர்ந்தவையாகும். சுமார் இரண்டு தொன்கள் நிறையுடைய இந்த நீர் யானைகளைப் பிடிப்பதற்கு மிருகக்காட்சிசாலை அதிகாரிகள் வெள்ளம் முழுமையாக வடியும் வரை காத்திருக்க வேண்டியேற்பட்டது. அதுமட்டுமன்றி இந்த 'ஸ்கதார்' என்ற அகழி அமைந்துள்ள இப்பகுதி கிராமவாசிகளுக்கு தமது வீடுகளில் இருப்பதற்கும் அச்சம் ஏற்பட்டது. அந்த மிருகக்காட்சிசாலை முற்றாக நீரில் மூழ்கியதால் இந்த நீர் யானைகள் நீரில் நீந்தி வெளியேறின என்பது பின்னர் தெரியவந்தது. இந்த நீர் யானைகள் காணாமல் போய்விட்டதை அறிந்த அதிகாரிகள் அவற்றைத் தேடி வலை விரித்தனர். 9 வருடங்களாக அந்த மிருகக்காட்சிசாலையில் இருந்து வரும் 11 வயதுடைய இந்த நீர் யானைகளால் எவ்வித ஆபத்தும் இல்லை என்றும் அவை மக்களுக்கு நல்ல நண்பர்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். ஈற்றில் காணாமல் போன நீர் யானைகள் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகவே கருதப்படுகின்றது''.

## அனைவரும் நன்கு அறிந்த ஹிபொ

பொதுவாக ஹிப்பபொடோமஸ் (Common Hippopotamus) என அழைப்பது அளவில் பெரிய அச்சம் தரக்கூடிய நீர் யானையாகும். யானைக்கு அடுத்தபடியாக



ஆபிரிக்க நீர் யானையின் எலும்புக்கூடு








பூமியில் வாழக்கூடிய பிரமாண்டமான மிருகம் இதுவேயாகும். இம்மிருகம் பிரமாண்டமான சதைப் பிண்டமாகக் காணப்பட்டாலும் இதன் கால்கள் குட்டையானவை. அதேபோன்று, வேகமாக ஓடக்கூடியவை. அதிகமாக நீரில் நேரத்தைக் கழிப்பதை விரும்புவதுடன், இவை நீர் நிலைகளை நோக்கி ஓடும்போது, இடையில் யாராவது குறுக்கிட்டால் மிகவும் குரூரமான முறையில் முட்டி மோதி தாக்கும் குணமுடையது.

## நதியின் குதிரையான ஹிப்பொபொடமஸ்

நீர் யானைகள் பகலில் நீர் நிலைகளில், அகழிகளில் அல்லது சதுப்பு நிலங்களில் காலத்தைக் கழிக்கின்றன.மாலையாகும்போதே உணவு தேடித் தரைக்கு வருகின்றன. ஆனால், அவ்வாறு உணவு தேடி நீண்ட தூரம் அவை செல்வதில்லை. அனேகமாக, அவற்றின் உணவு இலை, குழைகளாகவே காணப்படுகின்றன. இந்த நீர் யானைகளில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று பிரமாண்டமான 'ஹிபோவும்' மற்றது அளவில் சிறிய 'பிக்மிஹிபோ' இனமுமாகும். இவை அதிகம் வாழ்வது ஆபிரிக்க கண்டத்திலாகும். பூமியில் வாழும் மூன்றாவது பிரமாண்டமான மிருகம் இந்த நீர் யானை இனமாகும்.





உலகில் பெரிய உயிரினமாக யானையும் இரண்டாவது உயிரினமாக காண்டா மிருகமும் மூன்றாவதாகவே நீர் யானையும் கருதப்படுகின்றது. இந்த நீர் யானைகள் கூட்டமாக உணவு தேடிச் செல்லும்போது விவசாய நிலங்கள் நாசமாக்கப்படுகின்றன. அத்துடன், இவை அதிக நிறை கூடிய மிருகங்களாக இருப்பதால் இவை அங்காங்கே திரியும்போது மண் மேடுகள் சரிந்து மண் அரிப்பு ஏற்படுவதுண்டு.

## உடலைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் ஹிப்போ

இவற்றின் தோல் தடிப்பானதும் கனமானதுமாகும். வாலிலும் மூக்குத்துவாரத்திலும் மயிர்கள் உள்ளன. இதன் தோலுக்குக் கீழால் தடிப்பான கொழுப்புப் படை அமைந்திருக்கின்றது. இதனால், இதன் உடம்பில் கடும் சூரிய ஒளி படும்போது பளபளப்புடன் காணப்படும். அத்துடன், இவற்றில் காணப்படும் ரோஜா நிறப்படிவு அவற்றின் உடம்பைப் பாதுகாக்கும் கவசப்படையாகத் தொழிற்படுகின்றது. இது நாம் கடும் உஷ்ணத்தால் உடம்பைப் பாதுகாக்க திரவங்களை (ஜெல், க்றீம்) தடவிக் கொள்வது போன்றாகும். ஹிப்போக்கள் ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டு உடல் காயப்பட்டாலும் இந்த ரோஜா நிற கொழுப்பு போன்ற திரவம் காரணமாக காயம் விரைவில் குணமாகி விடுகின்றது.

## பாடசாலை செல்லும் ஹிப்போ

ஹிப்போ பாடசாலை என்றால் என்ன? ஆங்கிலத்தில் ஹிப்போக் கூட்டம் ஹிப்போ ஸ்கூல் (Hippo School) என்றே அழைக்கப்படுகின்றது. இந்த ஹிப்போக்கள் கூட்டமாக வாழும் மிருகங்களாகும். இதன் ஒரு கூட்டத்தில் 20-100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஹிப்போ கூட்டம்


பிக்மி ஹிப்போ




கால் விரல்கள்





பிக்மி ஹிப்போவின் மண்டையோடு


பண்டைக்கால ஹிப்போ வேட்டைக்காட்சி


சண்டையிடும் ஹிப்போ

# பொது ஹிபபொடேமஸ்



**பொதுப் பெயர்** - ஹிபபொடேமஸ் (ஹிபோ)
**உயிரியல் பெயர்** - ஹிபபொடேமஸ் அம்பியஸ்.
**குடும்பம்** - ஹிபபொடமிடே
**கோத்திரம்** - அடியோடக்டிலா
**வாழ்விடம்** - மேற்கு, மத்திய, கிழக்கு மற்றும் தெற்கு ஆபிரிக்க பிரதேசம்





**வெளித்தெரியும் பண்பு** - பிரமாண்டமான உடல் அமைப்பு. உடலில் சதை இல்லை. கொழுப்பும் சவ்வும் அதிகம் காணப்படும். உடம்பின் மேற்பகுதி ஊதா மற்றும் கருநீல நிறம். கீழ்ப்பகுதி ரோஜா நிறம் (Pink) கால்கள் கட்டையானவை. தாடைக் குக் கீழ் இரண்டு கூர்மையான பற்கள் உள்ளன. அவை ஹிப்பொவின் கொம்பு எனப்படும்.
**செயற்பாடு** - அமைதியானது. பகலில் நீரிலும், இரவில் தரையிலும் வாழும். உணவு - இலை குழைகள்.
**முக்கிய உணவு** - தாவரங்கள், விவசாய நிலங்களில் விளையும் நெல், கோதுமை.

வரையான ஹிபொக்கள் இருக்கும்.

இவை கூட்டமாகச் செல்லும்போது முன்னால் பெண் யானைகளும் நடுவில் குட்டிகளும் அவற்றைச் சூழ ஆண் யானைகளுமாக உலா வரும். ஆனால், பகல் முழுவதும் நீர் நிலைகளில் அல்லது சேற்று நிலங்களில் காலத்தைக் கழிப்பதே இவற்றின் இயல்பாகும். இவற்றில் இனப்பெருக்க காலத்தில் மட்டுமே பெண் ஹிப்போக்கள் ஆண் ஹிப்போக்களை நெருங்க விடுகின்றன. ஏனைய காலங்களில் ஆண் ஹிப்போக்கள் பெண் ஹிப்போக்களை நெருங்கினால் சண்டையிட்டு தாக்குதல் நடத்தி துரத்திவிடும்.

## ஹிப்போ குட்டிகள்

ஒரு ஹிப்போ ஒருமுறையில் ஒரு குட்டியை ஈன்றெடுக்கும். குட்டி ஈனுவதற்காக எப்போதும் நீரில் இருந்து தரையையே நாடுகின்றன. இருந்தபோதும் அரிதாக நீருக்கு அடியிலும் குட்டியை ஈன்றெடுக்கும் செயல் நடைபெறும். குட்டி பிறந்து சில நிமிடங்களில் நீந்தவும் பழகிவிடும். அத்துடன், தரையில் நடமாடவும் முடிகின்றது. தாய் ஹிப்போ ஓர் இடத்தை விட்டு எங்காவது நகர்வதாயின் அருகில் உள்ள இன்னொரு தாய் ஹிப்போவிடம் தன் குட்டியை பொறுப்பாக ஒப்படைத்து விட்டே செல்லும். ஒருபோதும் குட்டியை பொறுப்பற்ற விதமாக தனியே விட்டுச் செல்லாது.

## ஹிப்போ சண்டை

ஆண் ஹிப்போ ஏனைய மிருகங்களுடன் சண்டையிடும்போது, மூக்கை இயன்ற வரை அகலமாக விரித்து கர்ஜித்து சண்டையிடும். வாயை அகலத் திறந்து கூர்மை யான இரண்டு பற்களாலும் எதிரியை கடித்துக் குதறும் ஆற்றல் பெற்றது. ஆனாலும், சண்டையிடுவதன் ஒரே நோக்கம் பெண் ஹிப்போக்களைக் கவர்ந்திழுப்பதாகும்.

## நீந்தும் ஹிப்போக்கள்

ஹிப்போ என்றால் 'நதியின் குதிரை' என்று பொருள்படும். ஹிப்போக்களின் உறைவிடம் தரையல்ல. நீர் நிலைகளே நீருக்கு அடியில் 3-5 நிமிடங்கள் வரை இருக்கும் ஆற்றல் பெற்றவை. சுவாசத்தின்போதே திடீரென நீரின் மேல் பரப்பிற்கு வந்து தலையை உயர்த்தும்.

## நாம் அறியாத பிக்மி ஹிப்போ

ஹிப்பொ பிக்மி, நீர் யானை, பன்றி என்றழைப்பது நீர் யானையின் 1/5 பங்கு அளவு உடற் பருமனைக் கொண்டதாகும். இவை சாதாரண நீர் யானை போன்று எந்நேரமும் நீரில் இருப்பதில்லை. ஆனால், அதிகமாக சதுப்பு நிலங்களில் வாழ்வதை விரும்புகின்றன. ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றிக்கொள்ள பற்றைக் காடுகளுக்குள் பதுங்கிக்கொள்ளும். இவை கூட்டமாக இல்லாமல் ஜோடியாகவே வாழும்.

(ஆ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு நாடு

# ஜிபூட்டி



தலைநகரின் ஒரு பகுதி

ஜிபூட்டி துறைமுகம்

தேசிய சின்னம்

**அரசு:** ஜனாதிபதி தலைமையிலான குடியரசு.
**சுதந்திரம்:** பிரான்ஸிடமிருந்து- ஜூன் 27, 1977.
**தேசிய பெயர்:** ஜம்ஹூரிய்யா ஜிபூட்டி (Republic of Djibouti).
**தேசிய விடுமுறை:** சுதந்திர தினமாகிய ஜூன் 27.
**அதிபர்** (1999): இஸ்மாயில் ஓமர் க்வெல்லிஹ்.
**பிரதமர்** (2001): டிலெய்டா மொஹமட் டிலெய்டா.

## புவியியல்

ஜிபூட்டி நாடு வடகிழக்கு ஆபிரிக்காவில் ஏடன் குடாவுக்கு அருகில் செங்கடலின் தென்நுழைவாயிலில் அமைந்துள்ளது. எதியோப்பியா, எரிட்ரியா மற்றும் சோமாலியா ஆகிய நாடுகள் இதன் எல்லைகளில் அமைந்துள்ளன. இந்நாடானது பயனற்ற பாலை நிலத் தரைத்தோற்றத்தையே பெரும்பாலும் கொண்டுள்ளது. ஒடுங்கிய கரையோரப் பகுதி சமவெளிகளாகவும் வட பகுதியில் சிறிய மலைகள் பலவும் காணப்படுகின்றன. மத்திய மற்றும் தென் ஜிபூட்டி பகுதிகள் பாறைகளால் சூழப்பட்ட பாலைவனங்களையும் எரிமலை மேட்டுநிலங்களையும் கொண்டுள்ளன.


கோடா மலைப்பகுதி





**மொத்தப் பரப்பு:** 8,880 ச.மைல் (23,000 ச.கி.மீற்றர்); **நிலப்பரப்பு:** 8,486 ச.மைல் (21,979 ச.கி.மீற்றர்)
**தலைநகர்:** ஜிபூட்டி.
**உயர் சிகரம்:** மௌஸா அலி (2,063 மீற்றர்);
**தாழ் மையம்:** அஸ்ஸால் ஏரி (-155 மீற்றர்)


**நிலப்பிரிவுகள்:** 5 மாவட்டங்கள்.
**சனத்தொகை** (2010): 740,528.
**நாணயம்:** ஜிபூட்டி ஃப்ரேங்.
**மொழிகள்:** பிரெஞ்ச், அரபு (இரண்டும் உத்தியோகபூர்வ மொழிகளாகும்), சோமாலி, அஃபார்.
**இனக்குழுக்கள்:** சோமாலி 60%, அஃபார் 35%, ஏனையவை 5% (பிரெஞ்ச், அரேபியர், எதியோப்பியர் மற்றும் இத்தாலியர்).
**சமயங்கள்:** இஸ்லாம் 94%, கிறிஸ்தவம் 6%.
**எழுத்தறிவு:** 68%. **இணையத்தளக் குறியீடு:** .dj
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** .253
**தேசிய கீதம்**
Hinjinne u sara kaca
Calankaan harraad iyo
Haydaar u mudateen…என ஆரம்பமாகின்றது.


ஜனாதிபதி




பிரதமர்




## வரலாறு

கி.மு 3 ஆம் நூற்றாண்டில் ஏபல் வாசிகள் அரேபியாவில் இருந்து இடம்பெயர்ந்து, இன்றைய ஜிபூட்டியில் குடியேறினர். அதனைத் தொடர்ந்து சோமாலி இஸ்ஸாஸ் இனக் குழுவினர் அங்கு குடியேறினர். இஸ்லாம் மதம் கி.பி 825 இல் இப்பிரதேசத்தில் பரவியது. 1843 இற்கும் 1886 இற்கும் இடைப்பட்ட காலத்தில் ஜிபூட்டியை பிரான்ஸ் நாடு பெற்றுக்கொண்டது. 'பிரெஞ்ச் சோமாலி' என பொதுவாக அழைக்கப்பட்ட இந்நாடு, 1958 மற்றும் 1967 ஆண்டுகளில் பிரெஞ்ச் காலனி ஆட்சிக்கு ஆதரவாக வாக்களித்தது. 1977 ஜூன் 27 ஆம் திகதி பிரான்ஸ் இந்நாட்டிற்கு சுதந்திரம் வழங்கியபொழுது, நாட்டின் தலைநகராகிய ஜிபூட்டி என்ற பெயரே நாட்டின் பெயராகவும் சூட்டப்பட்டது.

1992 செப்டெம்பர் 4 ஆம் திகதி பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் புதிய பல கட்சி அரசியல் யாப்பு அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், அதற்கு முன்னர் 1991 இல் அஃபாஸ் மற்றும் இஸ்ஸாஸ் இனங்களிடையே ஆட்சி அதிகாரம் செலுத்துவதில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக, யுத்தம் ஆரம்பமாகி பேரழிவுகள் ஏற்பட்டன. சுதந்திரம் பெற்றதிலிருந்து அதிகாரபூர்வமான அதிபராக ஹசன் கவுல்ட் அப்டிடன் திகழ்ந்தார்.

## கலாசாரம்

இந்நாட்டு ஆண்கள் பருத்தியிலான உடைகளை தமது முழங்கால்களுக்குக் கீழாக அணிகின்றனர். பெண்கள் பருத்தி அல்லது பொலியஸ்டர் துணியிலான முழு நீள உடைகளை அணிகின்றனர். நாட்டின் கட்டடக்கலையில் இஸ்லாமிய, ஓட்டோமன், பிரெஞ்ச் கலை வடிவங்களின் தாக்கம் அதிகமாகவே காணப்படுகின்றது.

## காலநிலை

மிகவும் வெப்பமானதும் வறண்டதுமான காலநிலையைக்கொண்ட ஒரு நாடாகும். குறிப்பாக, கோடை காலத்தில் மிக உச்ச வெப்பநிலையுடைய காலநிலை நிலவுகின்றது. வடக்கே அமைந்துள்ள மலைப்பிரதேசங்களில் மிகச் சொற்ப அளவு மழைவீழ்ச்சி உண்டு.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2005): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் 10,800; செல்லிடத் தொலைபேசிகள்: 44100.
**வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2001): AM 1, FM 2. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2002): 1. **இணையத்தள வழங்குனர்கள்** (2007): 168; இணையத்தள பாவனையாளர்கள் (2006): 11000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2006): மொத்தம் 100 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (1999): மொத்தம் 2890 கி.மீற்றர். (இதில் செப்பனிடப்பட்டது 364 கி.மீ; செப்பனிடப்படாதது 2526 கி.மீற்றர்). **துறையும் துறைமுகமும்:** ஜிபூட்டி. **விமான நிலையங்கள்** (2007): 13.


## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 0.04%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** பழங்கள், மரக்கறி வகைகள், ஆடுகள், செம்மறி ஆடுகள், ஒட்டகங்கள், மிருகங்களின் தடிப்பான தோல்கள். **தொழிலாளர் தொகை** (2000): 282,000. **வேலையற்றோர்** (2007): 59%. **கைத்தொழில்கள்:** கட்டடப்பொருட்கள், விவசாய உற்பத்திகள், உப்பு. **இயற்கை வளங்கள்:** புவியியல் கேந்திர பகுதிகள், தங்கம், சுண்ணக்கல், பளிங்கு, உப்பு, பெற்றோலியம். **ஏற்றுமதிகள்** (2006): மீன் ஏற்றுமதிகள், தோல் வகைகளும் தோல் பொருட்களும். **இறக்குமதிகள்** (2006): உணவு வகைகள், போக்குவரத்து சாதனங்கள், ரசாயனப் பொருட்கள், பெற்றோலிய உற்பத்திகள், பான வகைகள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2006): சோமாலியா, யெமன், எதியோப்பியா, சவூதி அரேபியா, இந்தியா, சீனா.

## பிரசித்தி பெற்ற இடங்கள்

✸ மத்திய சந்தை (ஜிபூட்டி நகர்) ✸ டொராலே, கோர் அம்பாடோ கடற்கரைகள் ✸ அஸ்ஸால் ஏரி ✸ டேய் ஃபொரெஸ்ட் தேசிய பூங்கா ✸ திம்ப்யாகூடி அரண்மனை.


அஸ்ஸால் ஏரி








கோர் அம்பாடோ கடற்கரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 மடங்கு நீர்



இதுவரை கருதப்பட்டு வந்ததைவிட நூறு மடங்கு அதிக நீர் நிலவில் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். நிலவின் நிலப்பரப்புக்குக் கீழாக அது பரவியுள்ளதாக ஆய்வில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அப்பலோ விண்வெளிப் பயணத்தின்போது எடுத்து வரப்பட்ட தாதுக்களை அமெரிக்க விஞ்ஞானிகள் குழுவொன்று ஆய்வு செய்தது. அப்போது, முன்பு நினைத்ததைவிட நிலவின் தாதுப் பாறைகளில் 100 மடங்கு நீர் இருக்கலாம் என்று அக்குழு முடிவுக்கு வந்துள்ளது.

''நிலவின் உட்புறப் பகுதியில் நீர் பரவலாகக் காணப்படலாம். 40 ஆண்டுகளுக்கு மேலாக நிலவு உலர்ந்து போய்தான் இருக்கிறது என்று கருதினோம். எனினும், அந்நிலை தற்போது மாறியுள்ளது. நாம் நிலவின் உட்புறப் பகுதியில் நீரின் தோற்றம், அதன் தாக்கங்கள் பற்றி ஆராயவுள்ளோம்'' என்று குறித்த ஆய்வுக் குழுவில் இடம்பெற்ற விஞ்ஞானி ஒருவர் தெரிவிக்கின்றார். ஆனால், பூமியில் காணப்படும் நிலத்தடி நீரைப் போல நிலவில் உள்ள நீரை எளிதாகப் பிரித்தெடுக்க முடியாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# பிரபஞ்சம் பற்றி...



நமது பூமி உள்ளிட்ட கிரகங்கள், நட்சத்திரங்கள், எரிகற்கள், வாயு என அனைத்து வஸ்துக்களையும் உள்ளடக்கியதுதான் பிரபஞ்சம். ஆனால், எல்லையற்ற பிரபஞ்சத்தில் இவற்றின் பங்கு வெறும் 4 சதவீதம்தான் என்றும், எஞ்சிய 96 சதவீதத்தையும் இருண்ட பெரும்பள்ளம் மற்றும் சக்தி என்பன ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாகவுமே இதுவரை கருதப்பட்டு வந்தது.


ஆனால், அப்படி ஒரு பெரும்பள்ளமும் சக்தியும் இல்லாமல் இருக்கலாம் என்று இங்கிலாந்து ஆய்வாளர்கள் சிலர் தற்போது கூறுகின்றனர். துர்ஹாம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அந்த ஆய்வாளர்கள், விண்வெளி குறித்த வழக்கமான மாதிரியில் பெரும் தவறு இருக்கலாம் என்றும் 'பிரபஞ்சத்தின் கறுப்புப் பக்கம்' என்ற ஒன்று இல்லாமல் இருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளனர். அத்துடன், பிரபஞ்சம் வேகமாக விரிவடைந்து வருவதாக முன்னர் கருதப்பட்டது. ஆனால், அது அவ்வாறு இல்லை. பிரபஞ்சம் குறைவான வேகத்திலேயே விரிவடைந்து வருகிறது என்றும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.




# பூமியின் மேற்பரப்பில் கடும் பாதிப்பு

பூமியின் மேற்பரப்பில் அமைந்துள்ள 'தெர்மோஸ்ஃபியர்' (Thermosphere) அடுக்கில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பூமியின் மேற்பரப்பில் இருந்து 90 முதல் 600 கி.மீ உயரத்திலிருக்கும் பகுதி தெர்மோஸ்ஃபியர் அடுக்கு என்றழைக்கப்படுகிறது. வளிமண்டலம் முடிந்து, விண்வெளி ஆரம்பிக்கும் பகுதியிலேயே தெர்மோஸ்ஃபியர் அடுக்கும் அமைந்துள்ளது. சூரியனிலிருந்து வரும் சுற்றுச்சூழலுக்கு தீங்கான கதிர்களை வடிகட்டி அனுப்புவதில் இது பெரும்பங்கு வகிக்கிறது.




எனினும், அண்மைக்காலமாக வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிப்பு மற்றும் புறஊதாக் கதிர்களின் பாதிப்பால் இந்த அடுக்கு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக நாஸா தெரிவித்துள்ளது. இதனால், பூமியின் தட்பவெப்பநிலையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கடல்சார் ஆய்வுக்கழக விஞ்ஞானி ஜோன் எம்மர்ட் வெளியிட்ட ஆய்வறிக்கையில்; 'பூமியின் வளிமண்டலத்தில் கடந்த 43 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு திடீரென கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆய்வு முடிவின்படி வளிமண்டல அழுத்தம் திடீரென முப்பது சதவீத அளவிற்கு குறைந்துள்ளமை தெரியவந்துள்ளது.

தெர்மோஸ்ஃபியர் அடுக்கு சூரியனுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பகுதியாகும். பூமியின் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் சூரியனிலிருந்து வரும் புறஊதாக்கதிர்கள் இதில் பரவி விரிவடைகின்றன. இதை அந்த அடுக்கு பூமிக்கு வராமல் தடுக்கிறது. ஆனால், சூரியனிலிருந்து வரும் வெப்பத்தின் அளவில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை தெர்மோஸ்ஃபியர் அடுக்கில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்வி

## முகாமைத்துவம் - 14

### கற்றலுக்கான ஆலோசனைகள்



# மாணவர்களின் மனப்பான்மை

நல்ல மனப்பான்மையைப் பெற்றவர் நல்லெண்ணத்துடன் செயற்படுவார். பிள்ளைகளின் கல்வியில் அவர்களின் மனப்பான்மைகள் (Attitudes) தாக்கம் புரிகின்றன என்பது ஆய்வுகளின் முடிவாகும். நல்ல மனப்பான்மை கல்வியில் முன்னேற்றத்தை அளிக்கும். தீயன தீமையளிக்கும்.

பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரை தன்னொழுக்க விடயத்துடன் கல்வி விடயத்திலும் நல்ல மனப்பான்மையைப் பெற்றிருக்க வேண்டும். ஒரு மனிதனது செயற்பாடுகள் அவனது மனதிலிருந்தே தோன்றுகின்றன. இவ்வாறான சிறப்புமிக்க மனமானது சிறந்த ஆளுமை உடையதாக இருக்க வேண்டும்.



செய்யத் தூண்டுவது மனப்பான்மை ஆகும். உதாரணமாக; ஒரு மாணவன் கல்வி கற்க வேண்டும் என்ற மனப்பான்மையைக் கொண்டிருந்தால், கற்றலில் ஊக்கம் ஏற்படும். இதனால், அவனது மனப்பான்மை கற்றலை நோக்கியே நகரும். இதற்கு மாறாக; ஒரு மாணவன் தீய மனப்பான்மையைக் கொண்டிருந்தானேயானால், அவனது அனைத்து செயற்பாடுகளும் கேடானதாகவே அமையும். அவன் நல்ல விடயங்களைப் புறக்கணித்து தீய விடயங்களையே நாடுவான்.

எனவே, கல்வி கற்கும் மாணவனது மனப்பான்மையே இங்கு பிரதானமானதாகும். கல்வியானது எதிர்காலத்தின் ஆரம்ப நிலையாகும். இந்த ஆரம்ப நிலைதான் எதிர்காலத்தை திட்டமிட்டு தேடித் தருகின்றது. இந்த வயதில் கொண்டுள்ள மனப்பான்மைதான் எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்பதை தீர்மானிக்கின்றது.




## பாடசாலையின் கடமை

பிள்ளைகள் நற்பிரஜைகளாக வேண்டுமானால், அவர்களிடம் நல்ல மனப்பான்மைகள் உருவாக வேண்டும். அந்தவகையில், தமக்கும் சமூகத்துக்கும் திருப்தியான நல்ல மனப்பான்மைகளை மாணவர்களிடம் வளர்ப்பது பாடசாலையின் கடமையாகும். பாடசாலையில் கற்பிக்கப்படும் சமூகக்கல்வி, கணிதம் போன்ற பாடங்கள் மூலம் சார்பற்ற-திறந்த விஞ்ஞான மனப்பான்மையை வளர்ப்பது ஆசிரியரின் பணியாகும். பிள்ளைகள் ஏற்கனவே கொண்டுள்ள தீய மனப்பான்மைகளை மாற்றுவதும் ஆசிரியரின் பொறுப்பாகும்.

ஓர் ஆசிரியரின் நடத்தையானது, மாணவனின் மனப்பான்மையை வடிவமைப்பதில் உரிய தாக்கத்தைச் செலுத்துகின்றது. ஆகவே, மாணவனிடத்தில் சிறந்த மனப்பான்மையை உருவாக்குவதில் ஆசிரியர்களே பிரதானமாக செல்வாக்குச் செலுத்துகின்றனர்.

ஒரு செயலை குறித்ததொரு முறையில்

எனவே, கல்வி கற்கும் காலத்தில் சிறந்த மனப்பான்மையைப் பெற ஒவ்வொரு மாணவரும் முயற்சிக்க வேண்டும்.

(தொடரும்....)

-எம்.ஏ.எஃப். சப்ரானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வினாத்தாள் I


சுட்டெண்: ...................... நேரம்: 45 நிமிடங்கள்

* 01 தொடக்கம் 33 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

* 1, 2 ஆம் வினாக்களிலுள்ள ஒத்த உருக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

01.



(1) A, B (2) B, D (3) A, D

02.



(1) F, G (2) F, H (3) E, H

03. கவிதையில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

வானம்-கறுக்கின்றது
குளிர்காற்று-வீசுகின்றது
இடி-இடிக்கின்றது
மின்னல்-..........................

(1) விழுகின்றது (2) இடிக்கின்றது (3) மின்னுகின்றது

★ *4, 5 ஆம் வினாக்களில் முதல் இரு சொற்களுக்கு ஏதோ ஒரு வகையில் தொடர்புண்டு. மூன்றாவது சொல்லுக்குப் பொருந்தக்கூடிய நான்காவது சொல்லைத் தெரிவு செய்க.*

04. பசி-உணவு என்பது போல, நோய் - ..............................................

(1) தாதி (2) மருந்து (3) வைத்தியர்

05. கப்பல்-துறைமுகம் என்பது போல, விமானம் - .........................................

(1) ஆகாயம் (2) பயணம் (3) விமான நிலையம்

06. தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.





07. இரு உருக்களையும் சேர்க்கும்போது கிடைக்கும் உரு யாது?




08. குமார், சூரியன் உதிக்கும் திசையை நோக்கி நிற்கின்றான். அவனின் வலது பக்கம் 1/4 சுற்று திரும்பும்போது எத்திசையைச் சந்திக்கின்றான்?

(1) மேற்கு (2) தெற்கு (3) வடக்கு



★ *ஒவ்வொன்றும் 1 சதுர சென்ரிமீற்றர் பரப்பளவுகொண்ட 20 சதுரங்களை அருகேயுள்ள உரு கொண்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி 9, 10 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.*

09. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்?


(1) 12 (2) 10 (3) 8

10. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு மொத்தப் பரப்பளவின் என்ன பின்னம்?

(1) 1/4 (2) 1/3 (3) 1/2

11. 61 தொடக்கம் 68 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும்போது இலக்கம் 6 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 8 (2) 9 (3) 10

12.


மாம்பழத்தின் விலை ரூபா 20.00 எனின், அன்னாசிப்பழத்தின் விலை யாது?

(1) ரூபாய் 40.00 (2) ரூபாய் 60.00 (3) ரூபாய் 80.00

★ *2011 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி சனிக்கிழமை ஆகும். இதற்கேற்ப 13, 14 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.*

13. 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உள்ள சனிக்கிழமைகளின் எண்ணிக்கையும் ஞாயிற்றுக்கிழமைகளின் எண்ணிக்கையும் முறையே;

(1) 5, 5 (2) 4, 5 (3) 5, 4

14. 2011 ஆம் ஆண்டில் 365 நாட்கள் உள்ளன. அவ்வாண்டில் எத்தனை சனிக்கிழமைகள் உள்ளன?

(1) 54 (2) 53 (3) 52

★ *பின்வரும் வாக்கியங்கள் கருத்துள்ளவையாக இருப்பதற்கு செய்ய வேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்க.*

15. மீன் குஞ்சுகள் கடல் நீரில் பறந்து செல்கின்றன.

(1) கடல் நீர் என்பதற்குப் பதிலாக நன்னீரில் என்பதை இடுதல்
(2) பறந்து என்பதற்குப் பதிலாக நீந்தி என்பதை இடுதல்
(3) மீன் குஞ்சுகள் என்பதற்குப் பதிலாக கடலாமை என்பதை இடுதல்

16. பேரூந்து (பஸ்) தண்டவாளத்தில் செல்கிறது.

(1) பேரூந்து என்பதற்குப் பதிலாக கார் என்பதை இடுதல்
(2) தண்டவாளம் என்பதற்குப் பதிலாக இரும்புப் பாதை என்பதை இடுதல்
(3) பேரூந்து என்பதற்குப் பதிலாக புகையிரதம் என்பதை இடுதல்

17. 6 ▲ 3 = 24 ● 6 என்னும் கணிதச் செய்கையில் ▲, ● என்னும் இடங்களுக்குப் பொருத்தமான கணிதக் குறியீடுகளைத் தெரிவு செய்க.

(1) ×, + (2) ×, - (3) +, ÷


18. கஜன் பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின்போது, 100m ஓட்ட நிகழ்ச்சியில் நல்ல பயிற்சி பெற்றும், அவனால் அந்த நிகழ்ச்சியில் வெற்றிபெற முடியவில்லை. இதற்கான காரணமாக அமையக்கூடியது;


(1) உணவு உண்ணாமல் பங்குபற்றியமை
(2) விளையாட்டு மைதானம் வேறுபட்டமை
(3) கஜனைவிட வேகமாக ஓடக்கூடியவர்கள் இருந்தமை

★ *19, 20 ஆம் வினாக்களில் முதற்கூட்டிலுள்ள இரண்டு எண்களுக்கும் பதிலாக சரியான எண்ணைக்கொண்ட கூட்டைத் தெரிவு செய்க.*

19. [20x2] + 50 = 90 (1) [20 ÷ 2] (2) [8x5] (3) [40-10]

20. [60 ÷ 2] + 40 = 70 (1) [15x3] (2) [30+2] (3) [50-20]


21. பின்வரும் எந்தப் பொருட்சோடி மேலிருந்து பார்க்கும்போது  எனத் தோன்றும்?





22. ஒரு வீதியில் இரு மின்கம்பங்களுக்கிடையே 3 கொடிகள் வீதம் தொங்கவிட்டு அவ்வீதியை அலங்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. வீதியில் 9 மின்கம்பங்கள் இருந்தால் அவற்றுக்கிடையே தொங்குவதற்கு எத்தனை கொடிகள் தேவை?

(1) 27 (2) 24 (3) 12

★ *23, 24 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள எண்கோலங்களை அவதானித்து, வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.*

23.



(1) 8
(2) 16
(3) 2

24.



(1) 72
(2) 20
(3) 108

★ *25, 26 ஆம் வினாக்களில் பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.*

25. (1) பசு வீட்டில் வளர்க்கப்படும் பிராணி. அது நான்கு கால்களை உடையது.
(2) கிளி ஒரு பறவை. அது அனைத்துமுண்ணி.
(3) ஆமை உணவைப் பெறுவதற்கு நீரில் வாழும். இது ஈரூடக வாழியல்ல.

26. (1) இலங்கை ஒரு தீவு. அது இந்தியாவிற்கு வட திசையில் உள்ளது.
(2) கரப்பந்தாட்டம் இலங்கையின் தேசிய விளையாட்டு. ஓர் அணியில் ஆறு பேர் விளையாடுவர்.
(3) நாக மரம் இலங்கையின் தேசிய மரம். இதன் பூ வெள்ளை நிறம்.

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிட தொடர்பாடல் வரலாறு



**ஆரம்பத்தில் இயற்கை வழிமுறைகளின் மூலம் தொடர்பாடல்களை மேற்கொண்டு வந்த மனிதன், காலப்போக்கில் அச்சுக்கலையைக் கண்டறிவதில் வெற்றி கண்டான். ஒலி, ஒளி வழிகளாலும் சமிக்ஞை, சித்திரங்கள், குறியீடுகள் மூலமும் தொடர்பாடலை மேற்கொண்ட மனிதனின் தொடர்பாடல் வழிமுறைகள் அச்சுக்கலையின் அறிமுகத்துடன் புதிய பரிணாமம் பெறலாயிற்று.**

## அச்சுக்கலை

எழுத்துக்கலையின் அறிமுகத்தினால் மனிதனுக்கு தனது கருத்துக்களை ஏதாவதொன்றில் குறித்து வைக்கக்கூடியதாக இருந்தபோதும், அவற்றை மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்றவகையில் அச்சிட்டு வெளியிடுவதற்கான செலவு அதிகமாகவே இருந்தது. அக்காலத்தில் கருத்து வெளிப்பாடுகள் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டு, அவற்றிலிருந்து சில பிரதிகள் மட்டுமே பெறப்பட்டன. இதனால், அனைவருக்கும் அவற்றை வாசிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கவில்லை. இப்பிரச்சினைக்குத் தீர்வாகவே, அச்சுக்கலையின் ஆரம்பம் கி.பி 100 ஆம் ஆண்டளவில் நிகழ்ந்தது.

முதல் கட்டமாக பளிங்குக்கற்களின் மேல் எழுத்துக்களைப் பொறித்து, அவற்றின் மேல் சாயத்தைப் பூசி அச்செடுப்பதன் மூலம் பிரதி எடுத்தலை சீனர்கள் செய்து வந்தனர். துணியிலும் காகிதத்திலும் இவ்வாறாகப் பிரதி எடுத்தல் முறை செயற்படுத்தப்பட்டது. பின்னர், 5 ஆம் நூற்றாண்டளவில் சீனர்கள் பலகைகளில் எழுத்துக்களையும் உருவங்களையும் அலங்காரங்களையும் குடைந்து அதில் சாயம் பரப்பி பிரதிகளை எடுத்தனர்.


அச்சுக்கலையில் புதிய பரிணாமம் ஏற்பட ஜேர்மனியரான ஜொஹன்னஸ் கட்டன் பேர்க் என்பவர் காரணமாக இருந்தார். தச்சுத்தொழில் செய்து வந்த அவர், எழுத்துக்களை வார்த்தெடுத்து அவற்றைப் பொருத்தி அச்செடுக்க முடியும் என்பதைக் கண்டறிந்தார். இதனைத் தொடர்ந்து நீண்ட காலமாக கையால் எழுதிப் பிரதி எடுக்கும் முறைக்குப் பதிலாக காகிதத்தில் குறைந்த நேரத்தில் பிரதி எடுக்கும் அச்சுக்கலை அறிமுகமாகியது. இதனால், குறைந்த செலவில் கூடுதலான பிரதிகளை எடுக்கவும் முடிந்தது.



கட்டன்பேர்க் மற்றும் சகாக்கள்



நவீன அச்சு இயந்திரம்




## வாசிப்பினால் அறிவைப் பெறல்



உலகில் அச்சுக்கலை வளர்ச்சியானது வாசிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வழியமைத்தது. இதனால், நேர்த்தியான எழுத்து மற்றும் சித்திர வேலைப்பாடுகள் வளர்ச்சி கண்டன. எழுத்துக்களையும் அழகிய உருவங்களையும் சித்திரங்களையும் அச்செடுக்கும் முறை இதனையடுத்து இலகுவானதோடு, அப்பணி வளர்ச்சிக்கட்டத்தை நோக்கிப் பயணித்தது. இது வாசிப்பிலும் அதனூடாக அறிவினைப் பெறுவதிலும் உலகளவில் மக்களைத் தூண்டியது. அச்சிட்ட தகவல்கள் இடத்திற்கிடம் அனுப்பப்படலாயின. எனினும், இதற்காக மரபு ரீதியான போக்குவரத்து வழிகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டன. சுமார் 300 வருடங்கள் வரையில் இந்த முறையிலான விநியோகமே இடம்பெற்றது. ஓட்டவீரன், குதிரை வீரன், படகோட்டி ஆகிய வழிமுறைகளினூடாகவே மேற்படி பிரதி விநியோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

*(12, 13 ஆம் பக்கங்களைப் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# மானிட தொடர்

## நீராவியின் பயன்பாடு

17 ஆம் நூற்றாண்டில் நீராவி வலுவைப் பயன்படுத்தும் முறை அறிமுகமாகியது. நீராவி வலுவினைப் பயன்படுத்தி இயக்கப்பட்ட அச்சியந்திரத்தினூடாக துரிதமாகவும் குறைந்த செலவிலும் ஏராளமான பிரதிகளை அச்சிடக்கூடியதாக இருந்தது.

இந்த நீராவி இயந்திர அறிமுகம் இயந்திரங்களை இயக்குவதில் மட்டுமல்லாது போக்குவரத்திலும் புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியது. அச்சிடப்பட்ட தகவல்களை மிக விரைவில் இடத்திற்கிடம் கொண்டுசெல்ல நீராவி மூலம் இயங்கிய கப்பல்கள், புகையிரதங்கள் என்பன பெரிதும் துணைபுரிந்தன.



## மோர்ஸ் என்பவரின் தந்தி

கம்பித் தொடர்பு மூலம் மின்கம்பித்தொடர்பைப் பயன்படுத்தி சமிக்ஞைகளை அனுப்பும் முறை (Electric Impulses) 18 ஆம் நூற்றாண்டில் அறிமுகமாகியது. செமுவெல் எஃப்.பி.மோர்ஸ் என்பவர் 1832 இல் தந்தி அனுப்பும் (Telegraph) முறையை அறிமுகப்படுத்தினார். அதன்பின்னர், பல வருடங்களாக மின் கம்பி ஊடாக ரேகை மற்றும் குறியீட்டு முறையைப் பயன்படுத்தி தகவல்களை இடத்திற்கிடம் அனுப்பும் முறையை மேற்கொண்டு வந்தார். இந்த முறையில் உள்வரும் சமிக்ஞை (encoding) என்றும் வெளிச்செல்லும் சமிக்ஞை (decoding) என்றும் அழைக்கப்பட்டன. 1844 ஆம் ஆண்டு இந்த தந்திப் பரிமாற்றம் அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் இருந்து பெல்டிமோர் வரை 60 கி.மீ தூரத்திற்குப் பரந்து காணப்பட்டது.

1856 ஆம் ஆண்டு வெஸ்டர்ன் யூனியன் தந்திப் பரிமாற்ற நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அமெரிக்காவின் பல பகுதிகளுக்கு கணினியூடான தந்திப் பரிமாற்றம் விஸ்தரிக்கப்பட்டது. இந்த முறையால் இடங்களுக்கு கால்நடையாகத் தகவல்களை அனுப்பும் சிரமத்தில் இருந்து மனிதன் விடுபட்டான். தற்போதைய நவீன யுகத்தில் கணினியூடான தகவல் பரிமாற்றம் காரணமாக, அச்சுக்கலையிலும் புதிய அத்தியாயம் புரட்டப்பட்டது. இதனை அடுத்து, உலகில் ஆங்காங்கே நடைபெறும் நிகழ்வுகளை தகவலாகப் பெற்று, அதனை அச்சிட்டு விநியோகிக்கக்கூடியதாக இருந்தது.




## தொலைபேசி

1876 ஆம் ஆண்டு அலெக்சாண்டர் க்ரஹம் பெல்லினால் தொலைபேசி அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து, குறியீடு மற்றும் ரேகை மூலம் தகவல் அனுப்பப்பட்ட முறைக்குப் பதிலாக, கம்பி இணைப்பு மூலம் நேரடியாக குரலைக் கேட்கும் தொழில்நுட்பத்தை அவர் உலகிற்கு அறிமுகம் செய்தார். இதனால், தகவல் பரிமாற்றம் புதிய பரிணாமம் பெற்றது. 1880 ஆம் ஆண்டளவில் அமெரிக்கா முழுவதும் சுமார் 300,000 தொலைபேசிகள் பாவனையில் இருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.




## வானொலி

19 ஆம் நூற்றாண்டில் இலத்திரனியல் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக கம்பித் தொடர்போ, இணைப்போ இல்லாமல் தகவல் பரிமாற்றம் அறிமுகமானது. இதன் காரணமாக, வானொலி ஒலிபரப்பு முறை அறிமுகமானது. இலத்திரனியல் காந்த அலைவரிசை மூலம் (Electro Magnetic Waves) வானொலி தகவல் பரிமாற்றம் இடம்பெற்றது. 1901 ஆம் ஆண்டு அட்லாண்டிக் சமுத்திரம் ஊடாக முதன்முதலாக வான் அலை தகவல் பரிமாற்றம் நடைபெற்றது. இதனைக் கம்பியில்லாத் தந்தி முறை (Wireless Telegraph) என்றழைத்தனர். வானொலியின் ஆரம்பமும் இதுவாகும்.

1906 ஆம் ஆண்டு பொரஸ்ட் என்பவர் கம்பி இல்லாத் தகவல் பரிமாற்றக் கருவியை உற்பத்தி செய்வதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டார். அலைவரிசையைப் பயன்படுத்தி குரலை அல்லது இசையைக் கேட்கச் செய்யும் முறை இதனைத் தொடர்ந்து அறிமுகமாகியது. இதன் வளர்ச்சிப் படியே இன்றைய வானொலியாகும். 1920 ஆம் ஆண்டளவில் வானொலி அலை வரிசையைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையானது அமெரிக்காவில் மட்டுமன்றி, உலகம் பூராவும் பரவும் நிலை ஏற்பட்டது. மக்கள் வானொலியின் ஊடாக வெகு தொலைவில் நடைபெறும் நிகழ்வுகள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளக்கூடியவாறான தகவல் பரிமாற்ற முறை இவ்வாறே வளர்ச்சி கண்டது.





## தொலைக்காட்சி

தொலைக்காட்சி ஒளிபரப்பும் வானொலி ஒளிபரப்பைப் போன்றே ஒரே வகை இலத்திரனியல் ஊடகமாக இருந்தபோதும், அலைவரிசை செயற்பாட்டிலும் சமிக்ஞை தொடர்பிலும் வானொலியைவிட தொலைக்காட்சியில் சற்று வித்தியாசம் காணப்படுகின்றது.



வானொலியானது ஒலி அலைகளை மட்டுமே கொண்டுசெல்கின்றது. ஆனால், தொலைக்காட்சியோ ஒளி, ஒலி அலைகளினூடாக காட்சியைப் பார்ப்பதற்கும் செவிமடுப்பதற்கும் வழியமைக்கின்றது. 1926 ஆம் ஆண்டில் வான் அலை ஊடாக காட்சியையும் அனுப்ப முடியும் என்று கண்டறியப்பட்டபோதும், 1930 ஆண்டிலேயே தொலைக்காட்சி பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. இதற்கிடையில், இரண்டாம் உலகப் போர் ஆரம்பமானதால், தொலைக்காட்சி பயன்பாட்டுக்கு வருவதற்கு 1940 ஆம் ஆண்டு வரை தாமதம் ஏற்பட்டது.

ஆரம்பத்தில் கறுப்பு-வெள்ளைத் தொலைக்காட்சியே அறிமுகமாகியது. வர்ணத் தொலைக்காட்சி 1950 ஆண்டே அறிமுகமாகியது. 1960 ஆம் ஆண்டளவில் இலத்திரனியல் துறை மேலும் வளர்ச்சியடையலாயிற்று. அதனால், கறுப்பு-வெள்ளை தொலைக்காட்சிகளைவிட வர்ணத்தொலைக்காட்சியின் பக்கம் நாட்டம் அதிகரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடல் வரலாறு


## மறக்கப்பட்ட ஊடகம்



புகைப்படக்கலையின் ஆரம்பம்


ஊடகங்களின் வளர்ச்சி பற்றி கவனம் செலுத்துகையில், எம்மில் அநேகமானோர் இயற்கை வழி ஊடகத்தில் இருந்து அச்சுக்கலையையும் அதன் பின்னர் தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி என்றும் அதனை அடுத்து செய்மதித் தகவல் தொடர்பாடல் என்ற அடிப்படையிலுமே நோக்குகின்றனர். ஆனால், மின் மற்றும் இலத்திரனியல் கருவிகளின் அறிமுகம் மற்றும் அவற்றினால் கிடைத்த பெறுபேறுகள் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்தாலும், பார்வைக்கு காட்சியைப் பதிவு செய்வதற்கும் ஒலி நாடாப் பதிவுகளையும் மேற்கொள்ளக்கூடியதுமான துறைகள் மறக்கப்பட்டன.

19 ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் காட்சி உருவப் பதிவாக புகைப்படக்கலை அறிமுகமாகியது. அவ்வாறே, 20 ஆம் நூற்றாண்டில் ஒலிப்பதிவில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக க்ரமஃபோன் நடைமுறைக்கு வந்தது. 20 ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் இத்துறையின் பரிணாம மாற்றமாக அரங்கில் அசையாத திரைப்படமும் பின்னர், 1927 ஆம் ஆண்டளவில் ஒலியுடன்கூடிய அசையும் படக்கலையும் அறிமுகமாகியது. 1934 ஆம் ஆண்டு வர்ணத் திரைப்படத்துறை (சினிமா) அறிமுகமாகியது. இத்துடன், புகைப்படக்கலை, ஒலி-ஒளிப்பதிவு (Audio-Video Recording) முறைகளும் முக்கிய தொடர்பாடல் ஊடகமாக திகழ்கின்றன. எனினும், உலகெங்கிலும் உடனடியாக தகவல்களைப் பரிமாறிக்கொள்ளக்கூடிய முறையுடன் போட்டியிடுவதற்கு இந்த ஊடகங்களினால் முடியாமல் போனது. எனவேதான், இவை மறக்கப்பட்ட ஊடகங்களாகக் கருதப்படுகின்றன.



ஆரம்பகால திரைப்படமொன்று

## அதியுயர் தொழில்நுட்ப புரட்சி ஆரம்பம்



விண்வெளிப் பயணங்களின் காரணமாக வளர்ச்சியடைந்த புதிய தொழில்நுட்பம் காரணமாக அலுவலக-வீட்டு தொடர்பாடலில் பாரிய தாக்கம் ஏற்படலாயிற்று. இந்த தொழில்நுட்ப அறிமுகத்தினால் அலுவலகங்கள், வீடுகளிலிருந்தே தகவல் பரிமாற்றங்கள் இடம் பெறலாயின. கருத்துப் பரிமாற்றம், உரையாடல்கள் என்பன மேற்கொள்ளப்பட்டன. பணப்பரிமாற்றம் உட்பட மேலும் பல நடவடிக்கைகள் இலகுவாக மேற்கொள்ளப்பட்டன. இந்நடவடிக்கைகள் நாட்டுக்கு நாடு, கண்டத்துக்குக் கண்டம் என விரிவடைந்து செல்கின்றன.

## வீடுகளிலும் நவீன தொழில்நுட்பம்

அபிவிருத்தியடைந்த நாடுகளில் அநேகமான வீடுகளில் 'கேபல்' இணைப்பு மூலம் ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான தொலைக்காட்சி அலைவரிசைகளைப் பார்க்கும் வசதி ஏற்பட்டிருக்கின்றது. இதனை 'கேபல் தொழில்நுட்பம்' என்றழைக்கின்றனர். விண்வெளியில் நிலைநிறுத்தப்பட்டுள்ள செய்மதிகள் மூலம் இத்தகைய அலைவரிசைகள் பெறப்படுகின்றன. செய்மதித் தொலைக்காட்சி (Satellite TV) என்று இத்தொழில்நுட்பம் அழைக்கப்படுகின்றது. அதேபோன்று, தன்னியக்க நாடா மூலம் ஒளிபரப்பப்படும் அலைவரிசை நிகழ்ச்சிகளைப் பதிவு செய்துகொள்ளும் வாய்ப்பும் இதன் வழியே கிடைக்கின்றது. தவிர, தொழில்நுட்பப் புரட்சி காரணமாக CD, DVD தொழில்நுட்பமும் உலகை வெற்றி கொண்டிருக்கின்றது.





## எமது வாழ்வை மாற்றியமைத்த கணினியின் வருகை


தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக எம்முடன் மிகவும் நெருக்கமான தொழில்நுட்ப சாதனமாக கணினிகள் மாறிவிட்டன. அளவில் சிறியதாயினும் கணினிகளால் நாம் பெறும் சேவைகளை வரையறுக்க முடியாது. தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக இன்றளவில் முன்னரைவிட, அதிக தகவல்களை சேமித்து வைக்கக்கூடிய வசதியும் கிட்டியுள்ளது. தொடர்ச்சியாக இரவு-பகலாக இயங்கும் நீண்ட பாவனை செயற்பாட்டையும் இவை கொண்டுள்ளன.

கணினி ஊடாக ஏற்படுத்தக்கூடிய இணையத்தள வசதி காரணமாக வாசிகசாலை ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய தகவலைவிட அதிகளவு தகவல்களை வீட்டுக்குள் அல்லது அலுவலகத்தில் இருந்து பெறமுடிந்துள்ளது.

*(14 ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மானிட தொடர்பாடல் வரலாறு



(12, 13 ஆம் பக்கங்களின் தொடர்ச்சி.....)

## செய்மதி தொடர்பாடல்

தகவல் தொடர்பாடலுக்கு செய்மதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முடியும் என்ற சிந்தனையை உலகிற்கு முதன்முதலில் வெளியிட்டவர் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஆதர் சி.க்ளார்க் ஆவார். 1945 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் இருந்து வெளிவந்த 'வயர்லஸ் வர்ல்ட்' (Wireless World)-'கம்பியில்லாத உலகம்' என்ற சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரை ஒன்றின் மூலமே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

மூன்று செய்மதிகளுக்கிடையிலான தொடர்பை ஒன்றுடன் ஒன்று இணைத்து இந்தப் பணியை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும் என்றும் அதற்கான வரைபடத்தையும் அவர் வெளியிட்டிருந்தார். விண்வெளி ஓடுபாதையில் சஞ்சரிக்க விடப்படும் இந்த செய்மதிகள் ஊடாக முழு உலகையும் இணைக்கும் வகையிலான தொடர்பாடல் வலையமைப்பை உருவாக்க முடியும் என அவர் இதன்போது, விளக்கினார். ஆதர் சி.க்ளார்க் இந்தக் கருத்தினை வெளியிட்டது விண்ணுக்கு செயற்கைக்கோள் ஒன்றை அனுப்புவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புவி சுற்றுப்பாதையில் செய்மதி

பூமியை வலம் வருகின்ற தொடர்பாடல் செய்மதிகள் பெரும்பாலும் புவி சுற்றுப்பாதையிலேயே நிலைநிறுத்தப்படுகின்றன. இவ்வாறு நிலைநிறுத்தப்படும் செய்மதிகள் நுண்ணிய அலைகளினூடாக பூமியில் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு தொடர்பாடல் வலைப்பின்னல்களினூடாக இவ்விதம் தொடர்பை மேற்கொள்ளும்.


தொடர்பாடல் வசதிகளை வழங்கி வரும் செய்மதிகளூடாக செய்திகளை ஒலி வடிவில் மட்டுமன்றி, தகவலாகவும் சமிக்ஞை தரவுகளாகவும் தொலைக்காட்சி சமிக்ஞை போன்ற தெளிவான செய்திப் பரிமாற்றமாகவும் தொடர்பாடலை மேற்கொள்ளலாம். செய்மதித் தொடர்பாடல் முன்னேற்றத்தினால் நேரடி செய்மதி தொலைக்காட்சி ஒளிபரப்பினை ஒளிபரப்பு நிலையங்களின் ஊடாகவன்றி, செய்மதியூடாக நேரடியாக வீட்டிலிருக்கும் தொலைக்காட்சிகளினூடாகப் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

## செய்மதி தொழில்நுட்ப ஆரம்பம்

1957 ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யா முதன்முதலாக 'ஸ்புட்னிக்-1' என்ற செய்மதியை விண்வெளிக்கு அனுப்பியதன் மூலம் செய்மதி என்ற கனவு நனவாகியது. இந்த செய்மதி மூலம் சில வகையான தகவல்கள் பூமிக்கு அனுப்பப்பட்டன. ஆனால், தகவல் பரிமாற்றத்திற்கான முதலாவது செய்மதியான 'டெல்ஸ்டார்-1' என்ற செய்மதி 1962 ஆம் ஆண்டு அமெரிக்காவால் விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. தொடர்ந்து, 1963 ஆம் ஆண்டு டெல்ஸ்டார்-2 என்ற செய்மதியும் விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. தகவல் தொடர்பாடலுக்கு மேலதிகமாக இந்த செய்மதியூடாக காலநிலை பற்றிய தகவல்கள், புவி வரைபடம், பூகோள ரீதியான தகவல்கள், சுற்றாடல் தொடர்பான தகவல்கள் என்பனவும் பூமிக்கு அனுப்பப்பட்டன.

அத்துடன், இந்த செய்மதியின் உதவியுடன் அமெரிக்காவில் வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளும் இயங்கலாயின. இந்த செய்மதிகள் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தினாலேயே கண்காணித்து நிர்வகிக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டு ஃபெடரல் கொம்யூனிகேசன் ஆணைக்குழு (Federal Communication Commission) ஏற்படுத்தப்பட்டு, இந்த ஆணைக்குழு ஊடாக செய்மதிகளைக் கட்டுப்பாட்டில் வைத்து இயக்கும் கண்காணிக்கும் உரிமை தனியார் துறைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, செய்மதி தொழில்நுட்ப வளர்ச்சி துரிதமடைந்தது. 'ஆர்.சீ.ஏ. வெஸ்டர்ன் யூனியன்' என்ற நிறுவனம் செய்மதியைத் தயாரித்து விண்வெளிக்கு அனுப்பியதோடு, செய்மதிகளை விற்பனை செய்யும் உரிமையை தனியார் துறையினருக்கு வழங்கவும் நடவடிக்கைகளை எடுத்தது. இவ்வாறாக செய்மதி தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி மனிதனின் அன்றாட வாழ்விற்கு மேலும் சிறப்பை ஏற்படுத்தியது எனலாம்.



## செய்மதி தொழில்நுட்பத்தினால் வழங்கப்படும் சேவைகள்



செய்மதி தகவல் தொடர்பாடல் வசதி காரணமாக ஐந்து கண்டங்களும் ஒருங்கே இணைக்கப்பட்டதாக இன்றைய பூகோள கிராமம் (Global Village) உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதனால், 'உலகம் சுருங்கிவிட்டது' என்ற கருத்து வலுவடைந்திருக்கின்றது. 'உலகம் சுருங்கிவிட்டது' என்பதன் பொருள் 'எம்மை உலகத்தோடு இணைப்பதற்கு சில செக்கன்கள் மட்டுமே எடுக்கின்றன' என்பதாகும். அந்தளவுக்கு தகவல் தொழில்நுட்பம் எமது நடவடிக்கைகளை இலகுபடுத்தியிருக்கின்றது.

தகவல் பரிமாற்றம், விண்ணில் மிதக்கும் அபூர்வ வஸ்துக்கள் தொடர்பான ஆய்வு, கல்வி, இணைய வலைப்பின்னல் (Internet) உட்பட பல வசதிகள் செய்மதி தொழில்நுட்பத்தினூடாக எமக்குக் கிடைத்துள்ளன. இணையத்தள வசதியானது வீட்டிலிருந்தவாறே விமான டிக்கெட் பெறல், கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடல், அலுவல்களை மேற்கொள்ளல், ஷொபிங் செய்தல் என்று பல்வேறு பணிகளை இலகுபடுத்தியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பஸ் போக்குவரத்து சேவையின் வரலாறு






இலங்கையில் பஸ் போக்குவரத்து சேவையானது முதன்முதலாக 1907 ஆம் ஆண்டு T.W கொலட் என்பவரினால் கொழும்பு முதல் சிலாபம் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இப்போக்குவரத்து சேவையின்போது, பொதுமக்களுடன் பொருட்களும் ஏற்றி இறக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. இச்சேவையின் ஆரம்பத்துடன், 'லங்கா மோட்டர் ட்ரான்ஸ்போர்ட்' என்ற பெயரில் பஸ் போக்குவரத்துக் கம்பனி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

பின்னர் அரசாங்கத்தின் தலையீடு பஸ் போக்குவரத்தில் உள்வாங்கப்பட்டதன் காரணமாக 1916 ஆம் ஆண்டு போக்குவரத்து சட்டமொன்றும் ஏற்படுத்தப்பட்டது. இக் காலகட்டத்தில் தனியார் பஸ் போக்குவரத்துக் கம்பனிகள் பல உருவாகியுள்ளதாகவும் அறிய முடிகின்றது. அதனால், போக்குவரத்துத்துறையில் போட்டித்தன்மை ஏற்பட்டது. இக்காலப் பகுதியில் பிரித்தானியா, பெல்ஜியம் போன்ற நாடுகளிலும் பஸ் போக்குவரத்து சேவைகள் தொடங்கப்பட்டிருந்தன.

**1958 ஜனவரி 1 ஆம் திகதி முதல் சகல தனியார் பஸ் போக்குவரத்து சேவைகளையும் அரசு மக்கள் மயப்படுத்தி, இலங்கைப் போக்குவரத்து சபையை உருவாக்கியது**













தனியார் பஸ் சேவையில் ஏற்பட்ட போட்டி மனப்பாங்கின் காரணமாக, போக்குவரத்து சேவையில் சீரின்மையோ, தேக்கநிலையோ ஏற்படாதிருக்கும் பொருட்டு 1940 இல் மீண்டும் இதில் அரசு தலையிட்டது. அதன்படி, 1942 ஆம் ஆண்டில் பிரித்தானியாவில் இருந்த பஸ் போக்குவரத்துத்துறையின் முன்மாதிரிகளைப் பின்பற்றி, 2000 இற்கும் மேற்பட்ட தனியார் பஸ் கம்பனிகளை 85 ஆகக் குழுமைப்படுத்தியதோடு, ஒவ்வொரு கம்பனியும் பஸ் போக்குவரத்தில் ஈடுபடவென குறிப்பிட்ட பிரதேசங்களையும் ஒதுக்கிக் கொடுத்தது. ஒவ்வொரு கம்பனிகளுக்கும் தனித்தனியாக பஸ் போக்குவரத்து சேவையில் ஈடுபடவென போக்குவரத்துப் பாதைகளும் குறித்துக் கொடுக்கப்பட்டன. அவ்வாறான பிரதேசங்கள் கொழும்பில் எட்டும் கண்டியில் ஏழும் இருந்ததாக அறிய முடிகின்றது.

1950 இல் பொதுமக்கள் தனியார் பஸ் சேவையில் அதிருப்தியடைந்த நிலைமையின் காரணமாகவும் பஸ் கம்பனிகள் பஸ் கட்டண அதிகரிப்புக் கோரி நின்றமையாலும் அரசாங்கத்தினால் 1954 ஆம் ஆண்டு, போக்குவரத்துக் கொமிசன் ஒன்று நிறுவப்பட்டது. கொமிசனின் வலியுறுத்தல்களுக்கமைய, பஸ் போக்குவரத்துக் கம்பனிகளுக்கு அறிவுறுத்தல் செய்வதற்காகவும் கட்டுப்படுத்துவதற்காகவும் போக்குவரத்து சபை ஒன்று நிறுவப்பட்டது.

பஸ் போக்குவரத்து சேவையை மக்கள் மயப்படுத்துவதாகக் குறிப்பிட்டு, 1956 ஏப்ரல் மாதம் பதவிக்கு வந்த அரசு, தான் பதவிக்கு வந்தவுடனேயே, தனது வாக்குறுதியை செயல்படுத்தத் தலைப்பட்டன் விளைவாக, 1958 ஜனவரி 1 ஆம் திகதி முதல் சகல தனியார் பஸ் போக்குவரத்து சேவைகளையும் அரசு மக்கள் மயப்படுத்தி, இலங்கைப் போக்குவரத்து சபையை உருவாக்கியது. அதன்படி, 1200 போக்குவரத்துப் பாதைகளை உள்ளடக்கிய, 76 பஸ் கம்பனிகளையும் 3024 பஸ்களையும் 12,000 ஊழியர்களையும் இ.போ.ச கையேற்றது.

1978, 19 ஆம் இலக்க போக்குவரத்து சபை கட்டளை சட்டத்தின் பிரகாரம், 1978 ஜூன் 15 ஆம் திகதி இ.போ.ச வின் நடவடிக்கைகள் விரிவு படுத்தப்பட்டன. அதன்படி, 9 பிரதேச அலகுகளுக்கு ஒரு மத்திய டிப்போ என்றவாறாக 10 டிப்போக்கள் ஏற்படுத்தப்பட்டன.

அதன்படி, பிரயாணிகளின் தன்மை, அவர்கள் ஒன்றுசேரும் இடம், நேரம், விதம் போன்றவை கருத்திற்கொள்ளப்பட்டு பிரதேச டிப்போக்கள் நிர்மாணிக்கப்பட்டன.

பஸ் போக்குவரத்து சேவையின் ஏகபோகத்தைக் கொண்டிருந்த அரசு, 1979 ஆம் ஆண்டு முதல் தனியார் துறைக்கும் போக்குவரத்துத்துறையில் இடம் கொடுக்கத் தலைப்பட்டது.

தனியார் பஸ் சேவையை சட்டத்திற்குள் உள்வாங்கும் நோக்கில், 1984 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க தனியார் பஸ் போக்குவரத்துச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு தனியார் பஸ் திணைக்களம் உருவாக்கப்பட்டது.

1980 களில் நாட்டில் ஏற்பட்ட கலவரங்கள் காரணமாக பி.போ.ச வின் சேவையில் பின்னடைவுகள் ஏற்படவே, அது பெரும்பாலும் நட்டத்தில் ஓடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ் கம்பனி ஏற்படுத்தப்பட்ட போதிலும், அவை போக்குவரத்து சேவையின் இலக்கை எட்டிக் கொள்ள முடியாமல் போனது. அதாவது, 1979 இல் இ.போ.ச தினமும் 5376 சேவையில் ஈடுபடுத்தியது. 1989 பி.போ.ச தினமும் 3888 சேவை வரை குறைந்து 1993 இல் அதுவே தினமும் 2610 சேவையாகியமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக, மக்கள் போக்குவரத்துத்துறை காலத்துக்குக் காலம் பல பின்னடைவுகளையும் நஷ்டங்களையும் சந்திக்க நேர்ந்தமை, சீர்திருத்தங்களை ஏற்படுத்தும் நோக்கில், ஒன்றன் பின் ஒன்றாக சபைகளையும் அதிகாரங்களையும் ஏற்படுத்தி, சீர்திருத்தங்களைச் செய்ய முற்பட்டபோதிலும், இறுதியாக போக்குவரத்துத்துறை பழைமை நிலைமைக்கே வரவேண்டியேற்பட்டது. மீண்டும் இ.போ.ச வுக்கு உயிர்கொடுத்து, 'ஸ்ரீலங்கா போக்குவரத்து சபை' என்ற பெயரில் தற்போது அரசும் தனியாரும் தனித்தனியாக இலங்கையில் பஸ் போக்குவரத்து சேவைகளை நடாத்தி வருகின்றன.

**-செம்மைத்துளியான்**



## விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3693
ஆர்.நிரஞ்சன், தரம் - $8^{E}$, இந்துக் கல்., கொழும்பு-04.


அங்.இல: 3694
த.சாளினி, தரம் - $3^{B}$, புனித தெரேசாள் ம.கல்., அச்சுவேலி.


அங்.இல: 3695
டி.நிவேதனி, தரம் - $7^{B}$, பண்டாரவளை த.மத்.கல்., பண்டாரவளை.


அங்.இல: 3696
எஃப்.நுஸ்ரா, தரம் - $9^{A}$, அல்-பஹ்ரியா ம.வித்., கல்முனை.


அங்.இல: 3697
எஸ்.கோபிதன், தரம் - $8^{B}$, விபுலானந்தாக் கல்., வவுனியா.


அங்.இல: 3698
வினோ அபிஷான், தரம் - 1, கலைவாணி த.வித்., புப்புரஸ்ஸ.


அங்.இல: 3699
நுஃபைல் அஹமட், தரம் - $7^{D}$, டீ.எஸ்.சேனாநாயக்க கல்., கொழும்பு.


அங்.இல: 3700
எம்.நஸீம், தரம் - 11, ரொட்டவெவ ம.ம.வித்., திருகோணமலை.


அங்.இல: 3701
உ.தனுஷின், தரம் - 4, யாழ்ப்பாணக் கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3702
வை.விதுஷன், தரம் - 8, வட்டக்கண்டல் அ.த.கல்., மன்னார்.


அங்.இல: 3703
எம்.முர்ஷித், தரம் - $8^{C}$, அல்-மின்ஹாஜ் தே.பாட., ஹபுகஸ்தலாவ.


அங்.இல: 3704
எம்.மிராஜ், உயர் தரம், அல்-பஹ்ரியா ம.கல்., பாணந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு திருநெறிய தமிழ் மறைக் கழகம் நடாத்திய பண்ணிசைப் போட்டியில் கலந்துகொண்டு, கீழ்ப்பிரிவில் 1 ஆம் இடத்தைப் பெற்ற இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவியும் யா/வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை மாணவியுமான அபிராமி கனகசபை, நிகழ்வில் பாடுவதனையும் அவருக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) எம்.ஜி.எம். காண்டீபன் தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.



முள்ளிப்பொத்தானையைச் சேர்ந்த அஸ்ரப்-நளினா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா சிஹ்னாஸ், 04.08.2010 (இன்று) தனது ஆறாவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

## பிறந்தநாள் வாழ்த்துக்கள் குறித்து கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள், குறித்த பிறந்தநாள் நிகழ்வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த வாழ்த்துக்கள் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். தாமதித்துக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் ஆசிரியரான றஹ்மான் ஏ.ஜப்பாரின் 'ரசிகச் சூரியன்' எனும் தலைப்பிலான புதுக்கவிதைத் தொகுதியின் முதற் பிரதியை கல்விமானும் வர்த்தகருமான அல்ஹாஜ் இஸட்.எம்.றபீக் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



பா.லோஜன், தரம் - 6E, வவுனியா த.ம.வித்., வவுனியா.



எம்.இஃப்ராஸ், தரம் - 9D, மூதூர் மத்.கல்., மூதூர்.



ஆர்.குருபரன், தரம் - 8B, இந்துக் கல்., மாத்தளை.



நிப்ராஸ் அஹ்மட், தரம் - 10A, அறபா தே.பாட., வெலிகம.




எம்.ரிஹான், தரம் - 8D, அல்-அஸ்ஹர் ம.வித்., ஹெம்மாதகம.



க.சிரோமி, தரம் - 9A, கொட்டகலை த.ம.வித்., கொட்டகலை.



எம்.ஆஸிப், தரம் - 1A, கம்பளை தே.பாட., கம்பளை.



ரிஸானா ஹமீத், தரம் - 11, அல்-மினா மு.ம.வித்., கம்பளை.



அனிற்றா, தரம் - 4C, கார்மேல் பற்றிமா தே.பாட., கல்முனை.

## ஓவியம் வரைவோம் - 10

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூப்

நாம் சென்ற வாரம் தாமரை மலரொன்றை வரைந்து பார்த்தோம். தாவரங்களின் பாகங்கள் சித்திரம் வரைவோரின் கருப்பொருளாக இருந்திருப்பதை உலகில் வரையப்பட்டுள்ள புகழ் பெற்ற ஓவியங்களினூடாகக் காணலாம். அவற்றில் பூக்கள், காய்கள், இலைகள், கிளைகள் இயற்கையாக வரையப்பட்டிருப்பதைக் கண்டு ரசிக்கிறோம்.

இந்தப் பாடத்தில் தாவரங்களின் பாகங்களை வரைந்து பயிற்சி பெறுவதுடன், அவற்றை எவ்வாறு அலங்காரங்களாக உருவாக்குவது என்பது பற்றியும் கற்போம்.

### அலங்காரம்





'அலங்காரம்' என்றால் 'வடிவமைப்பு' அல்லது 'ஒழுங்கமைப்பு' எனலாம். ஏதாவது ஒரு பொருளை ஏதோ ஒழுங்கில் வரையும்போது, அது அலங்காரமாக அமையும்.

இதற்கு சிறந்த உதாரணமாக, பௌத்த விகாரைகளில் முக்கோண அடிப்படையில் அரைச் சுவர் கட்டப்பட்டிருப்பதைக் கூறலாம்.


**பயிற்சி:**

இவ்வாரத்துக்குரிய பாடத்தில் இலை ஒன்றை வரைவோம். படத்தில் காட்டியவாறு பல இலைகளை வரைந்து அவற்றை ஓர் ஒழுங்கமைப்பில் உருவாக்கும்போது சிறந்த-அழகிய ஓவியமாக அது அமைவதைக் காணலாம். இலைகளுக்கும் பின்னணிக்கும்





வேறுபட்ட நிறங்களை பயன்படுத்துவது ஓவியத்தை மெருகூட்டுவதாக அமையும்.



சதுர்ஷிகா திவ்யாஞ்சலி, தரம் - 5, வடிவாம்பிகை த.ம.வித்., சிலாபம்.



ரிகாஸா நியாஸ், தரம் - 3B, குருகுத்தல மு.ம.வித்., கடுகன்னாவ.





எம்.ரிப்கி, தரம் - 7A, இக்ரா மு.ம.வித்., கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதர்களைப் பற்றி ஈக்களின் எண்ணம்




ஆகா, கோடை எவ்வளவு இன்பமானது. அவை எல்லாற்றையும் வரிசையாகச் சொல்வது கூடக் கடினம். இதனால், அந்த வீட்டில் வசிக்கும் ஈக்களுக்குத்தான் எத்தனை ஆனந்தம். அவை ஆயிரக் கணக்கானவை. உல்லாசமாக ஙொய்யென்று இரைந்து பறந்தன. கும்மாளம் போட்டன... சின்ன ஈக்குஞ்சு பிறந்து, இறக்கைகளை விரித்தபோது அதற்கும் குதூகலமாக இருந்தது. விவரிக்கவே முடியாதபடி அவ்வளவு குதூகலமாக இருந்தது.

அந்த ஈக்குஞ்சு அங்குள்ள தோட்டத்துக்கு ஆயிரம் தடவை பறந்து போயிற்று. பசும்புல் மேல் கொஞ்ச நேரம் உட்கார்ந்து பார்த்தது. பூத்துக் குலுங்கிய பவளக் குறிஞ்சியையும் மொட்டுகள் விரியத் தொடங்கி இருந்த லிண்டன் தளிர்களையும் பாத்திகளில் இருந்த பூச்செடிகளையும் சற்று நேரம் வியந்து பார்த்துக் கொண்டிருந்தது. அத்தோட்டத்தின் தோட்டக்காரன் முன்கூட்டியே அக்கறை எடுத்துக்கொண்டு எல்லாவற்றையும் சீர்படுத்தி இருந்தான். ஆகா, எவ்வளவு நல்ல மனம் உள்ளவன் இந்தத் தோட்டக்காரன்!

இந்த மனிதர்கள் நிரம்ப நல்ல மனம் உள்ளவர்கள் ஆகையால், எங்கும் பல வகையான வசதிகளை ஈக்களுக்காகவே செய்து வைத்திருந்தார்கள். உதாரணமாக, அலியோனுஷ்கா காலையில் பால் குடித்தாள், பன் ரொட்டி உண்டாள். பின்னர் ஓல்கா அத்தையிடம் சர்க்கரைக் கட்டி கேட்டு வாங்கிக்கொண்டாள். இப்படி எல்லாம் அவள் செய்தது, ஈக்களாகிய எமக்குத்தான் மேலும் சில துளிகள் பாலும் முக்கியமாக பன் ரொட்டிப் பொருள்களும் சர்க்கரைத் துணுக்குகளும் எமக்கு வைப்பதற்காகத்தான். இந்தப் பொருள்களையும் துணுக்குகளையும்விட ருசியானவை எவை இருக்கமுடியும். அதிலும் காலை முழுவதும் பறந்து கொண்டே இருந்துவிட்டு பசியால் வாடிவந்து உண்ணும் போது அவை இனிய சுவையாகவே இருக்கும்.

சமையல்காரி பாஷாவோ, அலியோனுஷ்காவையும்விட நல்ல மனம் உள்ளவள். ஈக்களுக்கு நன்மை செய்வதற்காகவே அவள் ஒவ்வொரு நாளும் காலையில் கடைக்குப் போய், இறைச்சி, சில நாட்களில் மீன், பாலாடை, வெண்ணெய் என்று அபூர்வ ருசி உள்ள பண்டங்களை வாங்கி வந்தாள். மொத்தத்தில் வீட்டில் எல்லோரையும்விட நல்ல மனம் உள்ள பெண்பிள்ளை அவள்தான்.

ஓல்கா அத்தையோ? அடேயப்பா, இந்த அற்புதமான பெண்பிள்ளை தனிப்பட்ட ஈக்களுக்காகவே அவள் வாழ்கிறாள் என்று தோன்றியது. ஈக்களுக்குப் பறக்க வசதியாக இருக்கவேண்டும் என்பதற்காக அவள் ஒவ்வொரு நாள் காலையிலும் அனைத்து ஜன்னல்களையும் தன் கைகளால் திறந்து விடுவாள். மழை பெய்தபோதும் காற்று வீசிய போதும் ஈக்கள் இறக்கைகளை நனைத்துக் கொள்ளக் கூடாது. அவைக்குத் தடிமல் வந்துவிடக்கூடாது என்பதற்காக ஜன்னல்களை மூடினாள். ஈக்களுக்குச் சர்க்கரையும் சிறு பழங்களும் நிரம்பப் பிடிக்கும் என்பதைக் கண்டு கொண்ட ஓல்கா அத்தை நாள்தோறும் சிறு பழங்களைச் சர்க்கரைப் பாகில் வேக வைத்தாள்.

அவள் எதற்காக இப்படி எல்லாம் செய்கிறாள் என்பதை ஈக்கள் உடனே புரிந்து கொண்டு, பழக்கூழ் வைத்த பாத்திரத்தில் நன்றி உணர்வு காரணமாக உடனே சென்று மொய்த்தன. அலியோனுஷ்காவுக்கும் பழக்கூழ் ரொம்பப் பிடித்தது. ஆனால், ஈக்களுக்கு மனத்தாங்கல் ஏற்படுத்தக்கூடாது என்பதற்காக ஓல்கா அத்தை அவளுக்கு ஒன்று அல்லது இரண்டு ஸ்பூன் பழக்கூழ்தான் கொடுத்தாள்.

ஈக்களால் ஒரே தடவையில் எல்லாவற்றையும் உண்ண முடியாததால் ஓல்கா அத்தை பழக்கூழில் ஒரு பகுதியைக் கண்ணாடிப் பாத்திரத்தில் போட்டு வைத்து, அப்புறம் நாள்தோறும் தேநீர் அருந்தும்போது ஈக்களுக்கு அதை கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்தாள். ''மனிதர்கள் ஒன்றும் நீ நினைப்பது போல நல்ல மனம் உள்ளவர்கள் அல்ல. வெளிப் பார்வைக்குத்தான் அப்படித் தோன்றுகிறார்கள். இந்த வீட்டில் எல்லோரும் ஒருவரை 'அப்பா' என்கிறார்களே, அந்த ஆளை நீ கவனித்தாயா?'' என்று கேட்டது பொடுபொடுப்பதில் விருப்பம் உள்ள ஒரு கிழட்டு ஈ.

''ஆமாம், கவனித்தேன். அவர் ரொம்ப விந்தையான பேர்வழி. ஈப்பாட்டியாரே, நீங்கள் அவரைப் பற்றிச் சொல்வது முழுவதும் சரி... புகையிலைப் புகையை என்னால் தாங்கவே முடியாது என்பது அந்த ஆளுக்கு நன்றாகவே தெரியும். அப்படி இருந்தும் இவர் எதற்காகச் சுருட்டு புகைக்கிறார்? எனக்குத் தொல்லை கொடுப்பதற்காக இவர் வேண்டுமென்றே இப்படிச் செய்கிறார் என்று நினைக்கிறேன். தவிரவும், ஈக்களுக்காக எதுவும் செய்ய இந்த மனிதருக்கு விருப்பம் இல்லை.

அத்துடன், அவர் ஓயாமல் எதையோ மையால் எழுதிக் கொண்டிருக்கிறாரே அந்த மையை நான் ஒரு தரம் ருசி பார்த்தேன்.ஆனால், சுவையே இல்லை எனக்கு கோபம் கோபமாகத்தான் வந்தது. எனினும், மிகவும் அழகான, ஆனால் அனுபவமே இல்லாத இரண்டு ஈக்கள் இவருடைய மைக்கூட்டில் மூழ்கினதை நான் என் கண்களால் கண்டேன். இவர் பேனாவால் அவற்றில் ஒன்றை வெளியில் எடுத்து, காகிதத்தின் மேல் வைத்து அதனைக் கொன்றார். அது என் வாழ்வில் மறக்கமுடியாத பயங்கரக் காட்சியாக இருந்தது.

''இந்த அப்பாக்காரரிடம் நீதி என்பது அறவே கிடையாது என்று நான் நினைக்கிறேன். ஆனாலும், ஒரு நல்ல பழக்கம் இவரிடம் இருக்கிறது'' என்றது அனுபவமுள்ள அந்தக் கிழட்டு ஈ. ''சாப்பாட்டுக்குப் பின்னர் இவர் பீர் குடிக்கிறார். அவர் பீர் குடிப்பதில் எனக்குத் தடை இல்லை அது அவரின் விருப்பம். ஆனால், அதனை நான் குடிக்கும்போது என் தலைதான் சுற்றுகிறது... என்ன செய்வது, கெட்ட பழக்கம்!''

இந்த அப்பாக்காரர் பழக்கூழ் சாப்பிடுவது இல்லை. சர்க்கரைக் கட்டியையும் தேநீர் தம்ளரில் தான் போட்டுக் கொள்கிறார். அதனால்தான் இவர் ஈக்களுக்காக ஒன்றுமே செய்வதில்லைப் போல் இருக்கிறது. பழக்கூழ் சாப்பிடாத மனிதரிடம் நல்லது எதையும் எதிர்பார்ப்பது வீண் என்பது என் எண்ணம்... அந்த மனிதர் செய்யக்கூடியது எல்லாம் சுருட்டைப் புகைப்பதுதான்'' என பொடுபொடுப்பதில் விருப்பம் உள்ள அந்தக் கிழட்டு ஈ அங்லாய்த்தது.

(தொடரும்...)

# சுயநலம் கருதா பணி



வகுப்பில் ஆசிரியர் மாணவர்களுக்கு பாடம் நடத்திக்கொண்டிருந்தார். சுத்தம் எவ்வளவு முக்கியம் என்பது பற்றியும் அதனால், சுகாதாரம் எவ்வளவு மேம்படுகிறது என்பதையும் விரிவாக விளக்கினார். பின்னர் மாணவர்களைப் பார்த்து சுத்தம் பற்றிக் கேள்வி கேட்டார்.

''எது அசுத்தம் நிறைந்த பகுதியாக உள்ளது என்று உங்கள் அனுபவத்தைக் கொண்டு கூறுங்கள்'' என்று ஆசிரியர் கேட்டதும் ஒவ்வொரு மாணவனும் மாணவியும் எழுந்து நின்று பதில் சொன்னார்கள்.

''சேர், எங்கள் தெரு மிகவும் அசுத்தமாக இருக்கிறது'' என்றான் வெங்கடேஷ்.

''எங்கள் வீட்டுக்கு அருகில் உள்ள குளத்தைச் சுற்றி மிகவும் அசுத்தமாக இருக்கிறது சேர்'' என்றாள் அபிராமி. இப்படி ஒவ்வொருவரும் ஒரு குறையைச் சொல்லவும் ஆசிரியர் பேசலானார்.

''மாணவர்களே, உங்கள் இருப்பிடமும் மற்ற இடங்களும் எவ்வளவு அசுத்தமாக இருக்கின்றன என்று கூறினீர்கள். ஒரு வாரம் உங்களுக்கு அவகாசம் தருகிறேன். அனைவரும் அவரவர் கூறிய அசுத்தங்களைக் களைய நடவடிக்கை எடுத்து, பின் அதை சரியானவர்களிடம் கூறி அவர்களின் சான்றிதழை வாங்கி வாருங்கள். அப்படிச் செய்பவர்களில் யார் ஒருவர் திறமையாகத் தன் செயலை செய்து முடித்திருக்கிறாரோ, அவருக்கு நான் பரிசு தருவேன்'' என்று கூற, மாணவர்கள் மகிழ்ச்சியுடன் கைதட்டி வரவேற்றார்கள்.

மறுவாரம் சுகாதார ஆசிரியரின் வகுப்பு வந்தது. மாணவர்களும் மாணவிகளும் தாங்கள் மேற்கொண்ட முயற்சிகளையும் அதற்காகத் தகுந்தவர்களிடம் அவர்கள் பெற்ற சான்றிதழ்களையும் காட்டினர். ஆசிரியர் ஒவ்வொன்றாகப் பார்த்து, பாராட்டி முடித்தபோது, முகிலன் மட்டும் அமைதியாக அமர்ந்திருந்தான்.

''ஏன் முகிலா, நீ ஒரு சுகாதாரப் பணியும் செய்யவில்லையா? மற்றவர்கள் போல் முயற்சிக்கவும் இல்லையா?'' என்று ஆசிரியர் கோபத்துடன் கேட்க, அவன் எழுந்து நின்றான். அப்போது பாடசாலை தலைமை ஆசிரியர் அங்கு வந்தார். உடனே அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

''நான் உங்கள் சுகாதார ஆசிரியரின் நன் முயற்சியைப் பாராட்டுகிறேன். நானும் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். எல்லா மாணவ, மாணவிகளும் தாங்கள் செய்த செயலுக்கான சான்றிதழ்களைக் கொடுத்த போது, முகிலன் மட்டும் கொடுக்கவில்லை. அதற்காக அவன் எந்த முயற்சியும் செய்யாமல் இல்லை. ஆம்! பாடசாலை முடிந்ததும் எல்லா மாணவ, மாணவிகளும் வீடு செல்லும் மகிழ்ச்சியில் கிழித்துப் போட்ட பேப்பர்கள், உடைந்த பென்சில்கள், பேனாக்கள் என பள்ளி முழுவதும் அசுத்தமாகக் காட்சி அளித்தன. ஒருநாள் முகிலன் வகுப்பறைகளைச் சுத்தம் செய்து கொண்டிருந்ததையும் பூந்தோட்டத்துக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்ததையும் கவனித்த நான், அவனிடம் காரணம் கேட்டேன். அவன் இந்த வேலையை தினமும் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளான். ஆனால், அதுபற்றி யாரிடமும் சொல்வதில்லை. மற்றவர்கள் தங்கள் தெருவையும் குளத்தையும் கோவிலையும் சுத்தம் செய்ய முயற்சி செய்யும்போது, நீ மட்டும் ஏன் வகுப்பறையைச் சுத்தம் செய்கிறாய்? என்று கேட்டேன். நாம் இருக்கும் இடத்தைத்தான் முதலில் மிகவும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அதற்குப் பிறகு மற்ற இடங்களைப் பார்க்கலாம் என்று பணிவுடன் கூறினான். இதுதான் சத்தியமான உண்மை. மனம் மகிழ்ந்த நான் அவனைப் பாராட்டி உற்சாகப்படுத்தினேன். அவன் செய்த செயலுக்கு என் பாராட்டுதலையே சுகாதார ஆசிரியர் நற்சான்றிதழாக எடுத்துக்கொள்ளலாம்'' என்று தலைமை ஆசிரியர் சொன்னதும், மற்ற மாணவர்கள் கைதட்டி உற்சாகப்படுத்தினர். சுகாதார ஆசிரியர் முகிலனைத் [illegible] வெளிப்படுத்தினார். பரிசை தலைமை ஆசிரியர் மூலமே முகிலனுக்கு வழங்கினார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் நாம் முச்சக்கரவண்டி சாரதி, மாலா, தங்கை ஆகியோருக்கிடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

ත්‍රීවීලර් රියදුරා: **නෝනා කොහාටද යන්න ඕනේ?**
நோனா கொஹாடத யன்ன ஓனே?
முச்சக்கரவண்டி சாரதி: அம்மா எங்கே போக வேண்டும்?

මාලා: **මීගමුවේ පන්සල පාරට.**
மீகமுவே பன்சல பார(ட்)ட.
மாலா: நீர்கொழும்பு விகாரை வீதிக்கு.

නංගි: **අක්කේ දුර යන්න ඕනැද?**
அக்கே துர யன்ன ஓனெத?
தங்கை: அக்கா தூரம் போக வேண்டுமா?

මාලා: **නැහැ නංගි ළඟයි. කි.මී. තුනක් විතර තියෙන්නේ.**
நெஹெ நங்கி லங்கய். கி.மீ. துனக் விதற தியென்னே.
மாலா: இல்லை தங்கச்சி அருகில்தான். மூன்று கி.மீ. இருக்கும்.

නංගි: **ආ... එහෙනම් ළඟයිනේ.**
ஆ.... எஹெனம் லங்கய்னே.
தங்கை: ஆ.... அப்படியானால் அருகில்தானே.

ත්‍රීවීලර් රියදුරා: **නෝනා, මේ පන්සල පාර. ගේ කෝකද?**
நோனா, மே பன்சல பார. கே கோகத?
முச்சக்கரவண்டி சாரதி: அம்மா, இது விகாரை வீதி. எந்த வீடு?

මාලා: **නො. 85. තව ඉස්සරහ. ආ... අර තියෙන්නේ. ඔය කොළ පාට ගේට්ටුව ළඟ නතර කරන්න.**
நொ.85. தவ இஸ்ஸரஹ. ஆ... அற தியென்னே. ஒய கொல பா(ட்)ட கேட்டுவ லங்க நதற கறன்ன.
இல.85. சற்று முன்னால். ஆ.... அதோ இருக்கிறது. அந்த பச்சை நிற படலைக்கருகில் நிறுத்துங்கள்.

**ඔයාගේ ගණන කීයද?**
ஒயாகே கணன கீயத?
உங்களுடைய கணக்கு எவ்வளவு?

ත්‍රීවීලර් රියදුරා: **රුපියල් දෙසීයක් දෙන්න නෝනා.**
ருபியல் தெசீயக் தென்ன நோனா.
முச்சக்கரவண்டி சாரதி: இருநூறு ரூபாய் தாருங்கள் அம்மா.

මාලා: **ආ... මෙන්න.**
ஆ... மென்ன.
மாலா: ஆ... இந்தாருங்கள்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* நீர்கொழும்பு விகாரை வீதிக்குப் போக வேண்டும்.
**මීගමුවේ පන්සල පාරට යන්න ඕනේ.**

i. அக்கா தூரம் போக வேண்டுமா?
..........................................................

ii. அந்த பச்சை நிற படலைக்கருகில் நிறுத்துங்கள்.
..........................................................

iii. இருநூறு ரூபாய் தாருங்கள் அம்மா.
..........................................................






* **Have** மற்றும் **Has** முதலான நிகழ்கால துணை வினைச்சொற்களை (Present Tense Auxiliary Verb) இறந்த கால எச்சவினையுடன் (Past Participle) தனித்தனியாகக் கையாண்டு, உருவாக்கப்படுகின்ற நிகழ்கால வினைமுற்று வாக்கியங்களை (Present Perfect Tense) மேலும் இங்கே பயில்வோம்.

* நிகழ்கால வினைமுற்று வாக்கியங்களின் (Present Perfect Tense) அர்த்தங்களை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டுமாயின், அவற்றை இறந்தகால தனி வாக்கியங்களுடன் (Past Simple Tense) ஒப்பிட்டுப் பயில வேண்டும். அப்போதுதான், இந்த வாக்கியங்களை சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

* **மேலும் ஒரு விளக்கம்:** நிகழ்கால வினைமுற்று வாக்கியமும் இறந்தகால தனி வாக்கியமும் நடைபெற்று முடிந்த கருமங்களையே தெரிவிக்கின்றன. அத்துடன், இத்தகைய வாக்கியங்களை நடைமுறையில் பாவிக்கின்றபோது தான், சரியான அர்த்தங்களை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

* இந்த இரண்டு வகை வாக்கியங்களையும் நடைமுறையில் கையாள்கின்ற போது, இரு வேறு சந்தர்ப்பங்களிலேயே பயன்படுத்த வேண்டும்.

* தகுந்த உதாரணங்கள் மூலம் அவற்றை இங்கு அவதானிப்போம்.

(அ) I gave my book yesterday.
நான் எனது புத்தகத்தை நேற்றுக் கொடுத்தேன்.
(Past Simple Tense - இறந்தகால தனி வாக்கியம்)

* I gave. (Simple Verb)
நான் கொடுத்தேன். (தனி வினைச்சொல்)

(அ) I have already given my book.
நான் எனது புத்தகத்தை ஏற்கனவே கொடுத்துவிட்டேன்.
(Present Perfect Tense - நிகழ்கால வினைமுற்று வாக்கியம்)

* I have given. (Compound Verb)
நான் கொடுத்துவிட்டேன். (கூட்டு வினைச்சொல்)

**குறிப்பு:** மேற்படி இறந்தகால தனிவாக்கியத்தில் 'நேற்று' என்ற சொற்பிரயோகமும் நிகழ்கால வினைமுற்று வாக்கியத்தில் 'ஏற்கனவே' என்ற சொற்பிரயோகமும் பயன்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இவ்வாறாக, இரு வேறு சொற்பிரயோகங்களைக் கையாள்வதன் மூலமும் இந்த இரண்டு வகை வாக்கியங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை அடையாளம் காணமுடிகின்றது.

(இ) You posted that letter this morning.
நீ அந்தக் கடிதத்தை இன்று காலை தபால் செய்தாய்.
(Past Simple Tense - இறந்தகால தனி வாக்கியம்)

* You posted. (Simple Verb)
நீ தபால் செய்தாய். (தனி வினைச்சொல்)

(ஈ) You have already posted that letter.
நீ அந்தக் கடிதத்தை ஏற்கனவே தபால் செய்துவிட்டாய்.
(Present Perfect Tense - நிகழ்கால வினைமுற்று வாக்கியம்)

* You have posted. (Compound Verb)
நீ தபால் செய்துவிட்டாய். (கூட்டு வினைச்சொல்)

(உ) We finished that work yesterday.
நாங்கள் அந்த வேலையை நேற்று செய்துமுடித்தோம்.
(Past Simple Tense - இறந்தகால தனி வாக்கியம்)

(ஊ) We have already finished that work.
நாங்கள் அந்த வேலையை ஏற்கனவே செய்து முடித்துவிட்டோம்.
(Present Perfect Tense - நிகழ்கால வினைமுற்று வாக்கியம்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 2010 ஜூலை மாதம் கொழும்பு பங்குச்சந்தை, வரலாற்று காணாத உச்சத்தை அடைந்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் பொருத்தமற்ற கூற்று எது?



   i. 2008 இல் உலகில் 3 ஆம் இடத்தில் கொழும்பு பங்குச்சந்தை காணப்பட்டது.
   ii. அண்மைக்காலத்தில் பங்குச்சந்தையின் துரித வளர்ச்சிக்கு முக்கியமான காரணம் நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியான சூழ்நிலையாகும்.
   iii. பங்குச் சந்தை முகவர்களாக 15 முகவர்கள் செயற்படுகிறார்கள்.
   iv. பங்குச் சந்தை முகவர் கிளை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளமை. வளர்ச்சி வீதம் அதிகரித்துள்ளமை என்பன பங்குச்சந்தையின் உச்சக்கட்ட வளர்ச்சிக்கு ஏதுவான காரணங்களாகும்.

2. 2010 இல் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற மகிந்த ராஜபக்ஷ 58% வீதமான வாக்குகளைப் பெற்று தேர்தலில் வெற்றி பெற்றார். அவர் பதவி ஏற்ற நாள்?



   i. 2010 நொவெம்பர் ii. 2010 ஒக்டோபர் iii. 2011 ஜனவரி iv. 2011 டிசம்பர் v. 2012 ஜனவரி

3. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் யாழ்தேவி புகையிரத சேவை 1956 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது சம்பந்தமாக பின்வரும் தகவல்களில் எது பொருத்தமற்றது?



   i. யாழ்தேவி புகையிரத புனர்நிர்மாண சேவை 2009-03-23 இல் ஆரம்பிக்கப்பட்டது.
   ii. 1988 இல் யாழ்தேவி புகையிரதம் சிங்களவர்களாலும் 1985 இல் எல்.டி.டி.ஈ யினராலும் தாக்குதலுக்குள்ளானது.
   iii. புகையிரதப்பாதையை புனர்நிர்மாணம் செய்ய 'இதுறு மிதுரு' திட்டம் மூலம் செயற்படுத்த ஜனாதிபதி அனுமதி வழங்கியமை.
   iv. வவுனியா வரை இருந்த யாழ்தேவி பயண சேவை தற்போது தாண்டிக்குளம் வரை நீடிக்கப்பட்டுள்ளமை.
   v. இந்த புனர்நிர்மாண வேலைகளுக்கு உலக வங்கி உதவுகின்றமை.



# 07 க.பொ.த (உ/தர) பொது வினாத்தாள்

வழங்குபவர்: உடுவை பரந்தாமன்



4. ஈராக் போரில் பிரித்தானியாவின் டோனி பிளேயரின் அரசு தலையிட்டமை பற்றி ஆராய்வதற்கு 2009 இல் சேர் ஜோன் சில் கோர்ட் என்பவரின் தலைமையில் விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இது தொடர்பான பொருத்தமற்ற கருத்து எது?
   i. முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுக்கு ஆதரவாக முன்னாள் பிரித்தானிய பிரதமர் டோனி பிளேயர் பிரித்தானியப் படையினர் 45,000 பேரை ஈராக்குக்கு அனுப்பினார்.
   ii. 2009 ஜூனில் பிரித்தானிய பிரதமர் கோடன் பிரவுன் ஈராக் போரில் பிரித்தானியாவின் பங்கு பற்றி ஆராய்வதற்கு விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமித்தார்.
   iii. பயங்கரமான இரசாயன ஆயுதங்களை சதாம் உசைன் வைத்திருப்பதாகக் கூறி ஈராக் மீது போர் பிரகடனம் செய்யப்பட்டது.
   iv. ஈராக்கில் 10 லட்சத்திற்கு மேற்பட்டோர் இறப்பதற்கு காரணமாக இருந்ததோடு, மேலும் எந்தவிதமான பயங்கரமான ஆயுதத்தையும் கண்டுபிடிக்க முடியாமை.
   v. போரில் பங்குபற்றியமைக்காக டோனி பிளேயருக்கு நொபேல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டமை.

5. 2010-04-08 ஆம் திகதி இலங்கையில் 7 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதில் 1 கோடி 40 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இத்தேர்தல் சம்பந்தமாக கீழ்வரும் கூற்றுக்களில் பொருத்தமற்ற கூற்று எது?



   i. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 60.35% வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன. ஐக்கிய தேசிய முன்னணிக்கு 29.34% வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.
   ii. விகிதாசார தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டதன் பின்னர் இலங்கையில் அளிக்கப்பட்ட வாக்குகளில் ஒரு கட்சி பெற்ற மிகக்கூடிய வீதம் இதுவாகும்.
   iii. 1970 இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க 2/3 பங்கு அங்கத்தவர்களை நாடாளுமன்றத்தில் பெற்றிருந்தார். அவர் பெற்ற வாக்கு வீதம் 48% ஆகும். 1977 இல் J.R ஜயவர்தன 5/6 பங்கு அங்கத்தவர்களைப் பெற்றிருந்தார். இது விகிதாசார முறையில் 50.04% ஆகும்.
   iv. 2010 இல் ஐக்கிய முன்னணி 144 அங்கத்தவர்களையும் ஐக்கிய தேசிய முன்னணி 60 அங்கத்தவர்களையும் ஜனநாயக தேசிய முன்னணி 17 அங்கத்தவர்களையும் பெற்றிருந்தன.
   v. தொகுதிவாரியாக ஐ.ம.சு முன்னணி 135 தொகுதிகளையும் ஐ.தே.மு 11 தொகுதிகளையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு 14 தொகுதிகளையும் பெற்றிருந்தது.

6. 'சப் பிரைம் கிரைசிஸ்' என்பது 2008 முதல் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு அல்லது பொருளாதார சரிவு என்பதைக் குறிக்கின்றது. இது சம்பந்தமாகப் பின்வருவனவற்றில் பிழையான கூற்று எது?



   i. உலக பொருளாதாரப் பின்னடைவு ஐ.அமெரிக்காவில் ஆரம்பமாகியது.
   ii. ஐ.அமெரிக்க வங்கிகள் கட்டுக்கோப்புகளை மீறி வீட்டுக் கடன்களைத் திருப்பிக் கட்ட முடியாதவர்களுக்கு வழங்கியமையால் வங்கிகள் நிதி நெருக்கடிக்குள்ளாகின.
   iii. பராக் ஒபாமா பதவியேற்றதும் உடனே இப்பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தார்.
   iv. ஐ.அமெரிக்க காங்கிரஸ் இந்த நெருக்கடியைத் தீர்க்க 700 பில்லியன் டொலர்களை ஒதுக்கியது.
   v. இப்பொருளாதார நெருக்கடி உலக நாடுகள் அனைத்தையும் ஏதோவொரு வகையில் பாதித்தது.

**கடந்த 28.07.2010 இன் விடைகள்**

| | | |
|---|---|---|
| 1. ii | 4. iv | 7. iii |
| 2. ii | 5. iii | 8. iv |
| 3. v | 6. i | 9. v |




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

### இத்தாலியில்

# ஓட்டுனர் இல்லாத ரயில் கண்டுபிடிப்பு!



புதிய தொழில்நுட்பங்களைக் கையாண்டு ஓட்டுனர் இல்லாத மின்சார ரயில் என்ஜின் ஒன்று இத்தாலியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ரயிலின் பரீட்சார்த்த ஓட்டம் செக் குடியரசின் வெலிம் என்ற நகரிலுள்ள சர்வதேச ரயில் பரீட்சார்த்த ஓடுபாதையிலேயே பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. முற்றுமுழுதாக கணினிகளின் துணையுடன் வழிநடத்தப்படவுள்ள இந்த ரயில் பிரதான ரயில் கட்டுப்பாட்டுத்தளத்திலிருந்து இயக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு தொடக்கம் இத்தாலியின் ரோம் நகரில் இந்த ஓட்டுனர் இல்லாத ரயில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது. இந்த ரயிலானது, சுரங்கப்பாதை வழியே 25.4 கி.மீற்றர் தூரத்திற்கு செலுத்தப்படவுள்ளதுடன், இதில் சுமார் 1200 பேர் வரை பயணம் செய்யமுடியும்.

### இங்கிலாந்தில்

# புராதன காலத்து நாணயங்கள் கண்டெடுப்பு!



கி.மு 253 இற்கும் கி.மு 293 இற்கும் இடைப்பட்ட காலத்தில் பயன்படுத்தப்பட்டதாக கருதப்படுகின்ற வெள்ளி மற்றும் பித்தளையிலான ரோமர் காலத்து புராதன நாணயக் குற்றிகள் சில இங்கிலாந்தின் 'சமசெட் புரொம்' நகரத்தை அண்டிய பிரதேசமொன்றில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. புதைக்கப்பட்ட நிலையிலேயே இவை கண்டெடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், இங்கிலாந்தில் ஒரே இடத்தில் பெருமளவில் கண்டெடுக்கப்பட்ட புராதன நாணயங்களாக இவை கருதப்படுகின்றன. மருத்துவ சேவகர் ஒருவரினால் கண்டெடுக்கப்பட்டுள்ள இந்த நாணயக்குற்றிகளின் பெறுமதி பத்து லட்சம் டொலர் என்று கணிக்கப்பட்டுள்ளது. களிமண்ணினால் செய்யப்பட்ட புதையுண்ட பாத்திரமொன்றில் இருந்தே இந்த நாணயக்குற்றிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கி.மு 286 தொடக்கம் கி.மு 293 வரை இங்கிலாந்தில் ஆட்சி நடத்திய சர்வாதிகாரி மார்க்கஸ் ஒரெலியஸ் என்ற உரோமானிய சர்வாதிகாரியின் முகம் இந்த நாணயக்குற்றிகளில் பொறிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வீதியில் சிதறிய நாணயக் குற்றிகளைப் பொறுக்கிய மக்கள்

இரண்டரை மில்லியன் யூரோ பெறுமதிமிக்க நாணயக்குற்றிகளை தொகையாகக் கொண்டு சென்ற லொறியொன்று குடைசாய்ந்ததால் அந்த நாணயக்குற்றிகள் வீதியெங்கிலும் சிதறியதில் பொதுமக்கள் அவற்றைப் பொறுக்கிக்கொண்டு தலைமறைவாகிய சம்பவமொன்று இத்தாலியில் நடைபெற்றுள்ளது.

இத்தாலியின் செஸ்னா என்ற நகரத்திலிருந்து பாரி என்ற நகரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்த லொறியின் டயரொன்று வெடித்தமையினால் மேற்படி லொறி குடைசாய்ந்திருந்தது.

பொலிஸார் அவ்விடத்திற்கு வந்து சேர்வதற்கிடையில் ஆயிரக்கணக்கிலான யூரோ நாணயக்குற்றிகளை வீதியில் சென்றவர்கள் பொறுக்கி எடுத்துச் சென்றிருந்தனர். இச்சம்பவத்தில் காயமடைந்த வாகனச் சாரதியும் உதவியாளரும் பொலிஸாரினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

## அற்லஸ் கேள்வி - 267

**கேள்வி:** இங்கிலாந்தில் ஆட்சி நடத்திய உரோமானிய சர்வாதிகாரியின் பெயர் என்ன?

சரியான விடை.......................................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 267,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

## போட்டி இல - 265 இன் சரியான விடை: ஷேயோனான்

**பரிசு பெறுவோர்**

ஏ.கலைக்காந்தன்,
233/132, ஹேனமுல்ல கேம்ப்,
மாதம்பிட்டி வீதி, கொழும்பு-15.

ஏ.லோரன்ஸ் செல்வராஜ்,
மே/பா எம்.நஸார்,
தெம்பிலியான, குருவிட்ட.

வி.தனுஷிகா குமாரி,
50/B, அம்பாக்கோட்டை, கெங்கல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிரிக்கெட் அரங்கிற்கு முரளியின் பெயர்

இலங்கையிலுள்ள கிரிக்கெட் அரங்கமொன்றிற்கு முரளிதரனின் பெயர் சூட்டப்படவுள்ளது. அடுத்த வருடம் இலங்கையில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படவுள்ள அரங்கங்களில் ஒன்றான கண்டி பல்லேகெலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற மைதானத்திற்கே முரளியின் பெயர் சூட்டப்படவுள்ளது.

சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற இந்த கிரிக்கெட் அரங்கத்திற்கு 'முத்தையா முரளிதரன் சர்வதேச கிரிக்கெட் அரங்கு' என்று பெயரிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து முரளி ஓய்வு பெற்றுள்ளமை நாம் அறிந்ததே. 800 டெஸ்ட் விக்கெட்களையும் 515 ஒருநாள் விக்கெட்களையும் கைப்பற்றி இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ள முரளிதரனைக் கௌரவிக்கும் விதமாகவே மேற்படி அரங்கிற்கு முரளிதரனின் பெயர் சூட்டப்படவுள்ளது.

முரளிதரன் கண்டியில் பிறந்தவர் என்ற வகையில் மத்திய மாகாண சபை ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ முன்வைத்த யோசனைக்கமையவே, மேற்படி தீர்மானம் மத்திய மாகாண சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# மஹேலவின் சாதனை...!



இந்திய-இலங்கை அணிகளுக்கிடையே எஸ்.எஸ்.ஸி மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் மஹேல ஜயவர்தன மற்றுமொரு டெஸ்ட் சதத்தைப் பெற்றதன் மூலம் குறித்த ஒரே மைதானத்தில் பத்து டெஸ்ட் செஞ்ச்சரிகளைப் பெற்று சாதனையொன்றை முறியடித்துள்ளார்.

அதாவது, இதற்கு முன்னர் அவுஸ்திரேலியாவின் முன்னாள் துடுப்பாட்ட வீரரான டொனல்ட் பிரட்மன் மெல்போர்ன் அரங்கில் 9 டெஸ்ட் சதங்களைப் பெற்றிருந்தார். அதுவே ஒரே அரங்கில் அதிக எண்ணிக்கையில் சதங்களைப் பெற்ற சாதனையாக இருந்தது.

தற்போது இந்த சாதனையைத்தான் மஹேல முறியடித்துள்ளார்.

இதுவரை 112 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள மஹேல மொத்தமாக 28 டெஸ்ட் சதங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மஹேல சதங்களைப் பெற்ற வரிசை வருமாறு

| ஆண்டு | எதிராக | ஓட்டங்கள் |
|---|---|---|
| 1999 | இந்தியா | 242 |
| 2000 | தெ.ஆபிரிக்கா | 101 |
| 2001 | இந்தியா | 139 |
| 2001 | பங்களாதேஷ் | 150 |
| 2003 | இங்கிலாந்து | 134 |
| 2006 | தெ.ஆபிரிக்கா | 374 |
| 2007 | பங்களாதேஷ் | 227 |
| 2007 | இங்கிலாந்து | 195 |
| 2008 | இந்தியா | 136 |
| 2010 | இந்தியா | 174 |

# பயிற்சியாளராகத் தொடர விரும்பும் மெரடோனா



ஆர்ஜன்டீனா கால்பந்தாட்ட அணிக்கு தொடர்ந்தும் பயிற்றுனராக இருப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாக அந்த அணியின் பயிற்றுனராக உள்ள டியாகோ மெரடோனா தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு ஊடகமொன்றுடன் நடத்திய பேட்டியொன்றின்போது இக்கருத்தினை அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர், தனக்கு அவசியமான வகையில் உதவிப் பயிற்றுனர்கள் அமைந்தால் மட்டுமே இப்பணியை முன்னெடுக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, ஆர்ஜன்டீனா கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜூலியோ குரொன் டொனாவுக்கும் மெரடோனாவுக்கும் இடையிலான சந்திப்பொன்றிற்கும் ஏற்பாடாகியிருந்தது. தனது கோரிக்கைகள் எவை என்பதும் சம்மேளனத் தலைவரின் கோரிக்கைகள் எவை என்பது குறித்தான புரிந்துணர்வின் பின்னரே இறுதித் தீர்மானத்திற்கு வரமுடியும் என்றும் மெரடோனா மேலும் தெரிவித்துள்ளார்.

# பொன்டிங் 12,000 ஓட்டங்கள்



டெஸ்ட் போட்டிகளில் 12,000 ஓட்டங்களை எட்டியுள்ள அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கி பொன்டிங் உலக அணிகளில் 12,000 ஓட்டங்களைப் பெற்ற இரண்டாமவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

ஏற்கனவே,12,000 ஓட்டங்களைப் பெற்று முதலிடத்தில் இருப்பவர் சச்சின் டெண்டுல்கர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்தில் பாகிஸ்தான், அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையே நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியிலேயே பொன்டிங் இந்த இலக்கை எட்டியுள்ளார்.

இதுவரை 146 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள பொன்டிங் மொத்தம் 12,015 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

டெண்டுல்கர் 167 டெஸ்ட் போட்டிகளில் 13,539 ஓட்டங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரட்டைச் சதம்:
# சங்கா 3 ஆம் இடத்தில்...



இந்தியாவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் சங்கக்கார இரட்டை சதத்தைப் பெற்றதன் மூலம் இலங்கை வீரர்களில் அதிக எண்ணிக்கையிலான இரட்டை சதங்களைப் பெற்றவராக சாதனை ஏட்டில் பதியப்பட்டுள்ளார். இதற்கு முன்னதாக மார்வன் அத்தபத்து மற்றும் மஹேல ஜயவர்தன ஆகியோர் 6 இரட்டை சதங்களைப் பெற்று முன்னிலைகளில் இருந்தனர்.

உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான இரட்டை டெஸ்ட் சதங்களைப் பெற்றவர்களின் பட்டியலில் முதலாவது இடத்தில் இருப்பது அவுஸ்திரேலியாவின் டொனல் பிரட்மன் ஆவார். இவர் 12 இரட்டை சதங்களைப் பெற்று முதலாவது இடத்திலும் மே.இ. தீவுகள் அணியின் பிரயன் லாரா 9 இரட்டை சதங்களைப் பெற்று இரண்டாவது இடத்தில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. சங்கக்காரவும் இங்கிலாந்தின் முன்னாள் வீரர் வோல்ட்டர் ஹெமண்ட் ஆகியோர் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

# டென்னிஸ் தரப்படுத்தல்

சர்வதேச டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியலில் ஆடவருக்கான பிரிவில் ஸ்பெயின் வீரர் ரஃபாயல் நடாலும் மகளிர் பிரிவில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸும் முதலாவது இடத்தை தொடர்ந்தும் தக்க வைத்துள்ளனர்.

அதற்கமைய, ஆடவருக்கான



இரண்டாவது, மூன்றாவது இடங்களில் முறையே செர்பியாவின் நொவாக் ஜொகாவிச், சுவிட்ஸர்லாந்தின் ரொஜர் ஃபெடரர் ஆகியோர் பெற்றுள்ளதுடன், மகளிருக்கான இரண்டாம், மூன்றாம் இடத்தை முறையே செர்பியாவின் ஜெலினா ஜென்கோவிக், அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோர் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நற்குணமே வாழ்வுக்கு மணம்

நற்குணமில்லாதவன் வாழ்வு சிறக்காது. ஒரு மனிதன் எப்போது நற்குணமுள்ளவனாக இருப்பானோ அப்போதுதான் அவன் மனிதனாக மதிக்கப்படுவான். அவ்வாறு இல்லை எனில், அவன் மிருகத்துக்கு ஒப்பானவன்.

நாம் சிறியவர்கள் மீது அன்பு காட்டவேண்டும்; பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும்; ஏழைகளுக்கு உதவவேண்டும்; அநாதைகளை ஆதரிக்க வேண்டும். நம்முடைய பிரச்சினைகளில் பொறுமை காக்கவேண்டும்; பெருமையை விட்டொழித்துப் பணிவுடன் தொண்டு செய்ய வேண்டும்; யாரைப் பற்றியும் நல்லெண்ணம் நமக்கு வேண்டும்; பிறருக்கு மன்னிப்பளித்து வாழப் பழகவேண்டும்.

இவ்வாறு நாம் நற்குணத்தை வளர்த்துக்கொள்வோமாயின், நல்லதொரு எதிர்காலத்தை நாம் பெற முடியும் என்பது பலரின் அனுபவம் கண்ட உண்மை.

எம்.என்.சுமையா,
தரம் - 6[D].

# பாசமிகு நுளம்புச் சகோதரிகள்



"நுளம்பு அக்கா! ஏன் என்னோடு பேசாமல் போகிறீர்கள்?"

"ம்... என்ன பேசுவது? நம் இனமே அழியப் போகிறதுபோல் இருக்கிறது. அதை நினைக்கையில்தான் கவலையாக இருக்கிறது"

"என்ன சொல்கிறீர்கள்? புரியவில்லையே. உலகில் பிறந்த நாம் எப்போதாவது அழியத்தானே வேண்டும்?

"அதனைச் சொல்லவில்லை. தங்காய்! நம் இனத்தார் மனிதனுக்கு ஏற்படுத்திக்கொண்டிருக்கும் டெங்குக் காய்ச்சல்; அதனால், ஆயிரக்கணக்கானோர் தினமும் சிகிச்சை பெறுகின்றனர். அத்துடன், தினமும் பலர் இறந்து கொண்டிருக்கின்றனர்."

"ஆமாம் நுளம்பு அக்கா! ஆனால், அதனை அவர்கள் தமக்குத் தாமே தேடிக் கொள்கின்றனர். எம் இனத்தார் முட்டை இடும் வகையில் வசதியாக வீட்டுச் சூழல் மற்றும் இடங்களை வைத்துள்ளனரே. குப்பை கூழங்களையோ, தேங்கும் நீரையோ அப்புறப்படுத்துவதாக இல்லையே! அவர்களுக்கு நேரம் இல்லை. ஆனால், நோய்வாய்ப்பட்டு பல நாட்கள் மருத்துவமனைகளில் அல்லது வீடுகளில் முடங்கிக் கிடக்க அவர்களுக்கு நேரம் இருக்கின்றது".

"இருந்தாலும் இப்போது நிலைமை மாறிவிட்டது. நோயின் அச்சத்தினால் பீடிக்கப்பட்டு இருப்பிடங்களையும் சூழலையும் சுத்தம் செய்வதில் தீவிரமாக உள்ளனரே. அதனால் எமக்குத்தான் நஷ்டம், எமக்கு முட்டை இடவோ, குஞ்சு பொரிக்கவோ முடியாமல் போகின்றது. இதனால், எமது சந்ததிகள் அழிகிறதே! அதுதான் என் கவலை"

"ஆம் அக்கா நீங்கள் சொல்வது சரிதான். மனிதர்கள் சோம்பேறிகள், சந்தர்ப்பவாதிகள். ஆனாலும் சிலர் அழுக்கு நீர் தேங்குமிடங்களையும் அழுக்கான இடங்களையும் சுத்தம் செய்கின்றனரே. இதனால், எமது இனத்திற்கு முட்டையிடவோ, பதுங்கி இருக்கவோ முடியாமல் போகின்றது"

"சிறிது பொறுமையாக இரு. காலப் போக்கில் அவர்களுக்கு அலுப்புத்தட்டி விடும். சுத்தம் செய்யும் வேகமும் குறைந்து விடும்"

"ஆமாம் அக்கா நீங்கள் சொல்வதும் உண்மைதான். நுளம்புகளின் தொல்லையால் ஆரம்பத்தில் அவர்கள் சுற்றுச் சூழலை சுத்தம் செய்தார்கள். ஆனால், காலப்போக்கில் குறுக்கு வழிகளை நாடினர். சுத்தம் செய்வதைவிட தம்மை அதன் தொல்லையிலிருந்து பாதுகாக்க நுளம்புச் சுருள்களையும் வலைகளையும் உபயோகிக்கத் தொடங்கிவிட்டனர்.

இதுபோல டெங்கு நோயை ஏற்படுத்தும் எம் இனத்தவர்களிடம் இருந்து பாதுகாப்புப் பெற ஏதாவது குறுக்கு வழிகளைக் கண்டுபிடித்து விடுவார்கள். சூழலை சுத்தம் செய்வதை நிறுத்தி விடுவார்கள். அதன்பின் நமக்குக் கொண்டாட்டம்தான்.

எஸ்.நஸீஹா பேஹம், தரம் - 10,
அல்-கஸ்லாலி மத்.கல்., அடுளுகம.




## அழகிய இயற்கையே!



எழில் கொஞ்சும் இயற்கையே
உன் அழகைக் கண்டு
என் மனம் வியந்துவிட்டது
தாய் இல்லாமல் நான்
இல்லை என்பார்கள் ஆனால்
இயற்கை இல்லாமல் உலகில்
அழகு இல்லை என்பேன் நான்.

எஸ்.ஜீவன்,
தரம் - 8,
மா/ஹுனுகல த.வித்.,

## விடுகதை

1. இருந்த இடத்தில் ஓடிக்கொண்டிருப்பான். அவன் யார்?
2. மணி அடித்தால் மலை நகரும். அது என்ன?
3. நிலத்தில் இருப்பான். சில வேளைகளில் பாம்பின் வாயிலும் இருப்பான். அவன் யார்?
4. ஐவர் குடியிருக்கும் அழகு முற்றம். அது என்ன?
5. மாமா மக்கு மாமா மந்தமாக நடந்து போகும் மாமா. அது என்ன?
6. வெயிலில் உடன் வந்தவன் இருட்டில் காணாமல் போனான். அவன் யார்?
7. சட்டை போடாமல் 'பை' வைத்திருப்பான். அதில் அழகு மழலை வைத்திருப்பான். அவர் யார்?

விடைகள்

1. கடிகார முள்
2. ரயில்
3. தவளை
4. உள்ளங்கை
5. நத்தை
6. நிழல்
7. கங்காரு

எஸ்.நிரோஜன்,
யா/வைத்தீஸ்வராக் கல்., யாழ்ப்பாணம்.

## தேடுகிறேன்

கடலில் விழுந்தேன்
தேடினேன் சிப்பியை
பாடசாலையில் விழுந்தேன்
தேடினேன் கல்வியை
தாயின் மடியில் விழுந்தேன்
தேடினேன் அன்பை
நட்பில் விழுந்தேன்
தேடினேன் நல்ல நண்பனை
ஊடகத் துறையில் விழுந்தேன்
தேடுகிறேன் உலகத்
தகவல்களை

எஸ்.தினேஸ்ராணி,
தரம் - 10, மா/சத்வத்தை த.வித்.,

## ஒழுக்கமே உயர்வு தரும்



'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவனது வாழ்வின் உயர்வை, அவனது வாழ்வின் வெற்றி, தோல்வியை ஒழுக்கமே நிர்ணயம் செய்கிறது. சீரிய வாழ்வுக்குச் சிகரமாய் அமைவது சிறந்த ஒழுக்கமேயாகும்.

ஒருவனிடம் எத்தனை செல்வங்கள் இருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் இல்லையென்றால் உயர்வும் சிறப்பும் இல்லாமல் போய்விடும். மனிதன் மனிதனாக வாழ்வதே தலைசிறந்த ஒழுக்கத்தால்தான். இதனை நாம் உள்ளத்தில் நன்கு பதித்துக்கொள்ளவேண்டும். பல்வேறு திறமைகளைக் காட்டிலும் பல்வேறு பதவிகளைக் காட்டிலும் ஒருவனுக்கு ஒழுக்கமே சிறந்ததாக வேண்டப்படுகின்றது.

உலகம் மதித்துப் போற்றும் வகையில் நாம் வாழவேண்டும். இறந்தும் வாழ்வதே நம் வாழ்வின் இலட்சியமாக அமையவேண்டும். இறந்தும் நாம் வாழ வேண்டுமாயின், இருக்கும் போதே மேன்மையான வாழ்வை வாழவேண்டும். அந்த மேன்மை ஒழுக்கத்தின் வழியாகவே வரும்.

சுருங்கக் கூறின், ஒழுக்கத்தை பேணுவோர் உயர்வர். அல்லாதோர் பழியெய்தி வாழ்வில் பாழ்பட்டழிவர். இந்த உண்மையை எந்நாளும் நினைவில்கொண்டு வாழ்வோமாயின் நமது வாழ்வு வளம் பெறும் என்பதில் ஐயமில்லை.

கே.ஆர். ரிஸ்லா, மருதமுனை.

## கேட்டதற்கே பதில்!

மாளவ நாட்டு மன்னனின் படைத்தளபதி வீரசேனன். அவனது திறமையையும் சக்தியையும் கண்டு அண்டை நாட்டு மன்னர்கள் மாளவத்தின் மீது தாக்குதல் நடத்தப் பயந்தனர். பல ஆண்டுகள் பணியாற்றிய வீரசேனனுக்கும் வயதாகிவிட்டது.

அவன் அப்போது மன்னனிடம் "நான் ஓய்வு எடுத்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே என்னைப் பணியிலிருந்து விலகிக்கொள்ள அனுமதிக்க வேண்டுகிறேன்" என்றான்.

அதுகேட்டு மன்னனும் "சரி, உமக்குப் பிறகு படைத்தளபதியாக சமரசேனனை நியமிக்கலாம் என எண்ணுகிறேன். அவனைப் பற்றிய உமது அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டான்.

வீரசேனனும் "உங்களது முடிவு சரியே. சமரசேனனே இப்பதவியை வகிக்கத் தகுதி பெற்றவன்!" என்றான். அப்போது அருகில் இருந்த முதலமைச்சர் "வீரசேனா, அவனுக்கு உம்மீது நல்ல அபிப்பிராயம் இல்லையே!" என்று கூறினார்.

வீரசேனனும் முதலமைச்சரைப் பார்த்துப் புன்னகை புரிந்தவாறே "மன்னிக்க வேண்டும். முதலமைச்சரே மன்னர் என்னிடம் கேட்டது சமரசேனனைப் பற்றி மட்டுமே. என்னைப் பற்றி அவன் என்ன நினைக்கிறான் என்று கேட்கவில்லையே!" என்றான்



பு.லோகசயன், தரம் - 8[D],
வவுனியா த.ம.ம.வித்., வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பாலைவனத்தில் வாழும் உயிரினங்களில் ஒரு சிலவற்றையே நான் அறிந்திருந்தேன். ஆனால், இத்தனை பாலைவன உயிரினங்கள் வாழ்வதை நீ சுமந்து வந்த ஆக்கத்தினூடாக அறிந்துகொண்டேன்.

**-ம.ஜெயப்பிரதாபன், தரம்-7, பாதிணாவலை மு.வித்., பொரகஸ்.**

'ஆதிகாலக் குடியிருப்புக்கள்', 'சிங்கராஜ வனம்' என்பன சிந்தனைக்கும் அறிவுக்கும் விருந்தாக அமைந்தன. உன் சேவை தொடர என் வாழ்த்துக்கள்.

**-வி.கல்பனா, கல்வியங்காடு.**

நான் தரம் 9 இல் கல்வி கற்பதால், 'எந்த நாட்டின் தேசிய கொடி?' என்ற தலைப்பிலான செய்தியில் தென் கொரியா, வட கொரியா ஆகிய நாடுகளின் தேசிய கொடிகளை விளக்கிக் காட்டியிருந்தமை எனக்கு மிகவும் பிரயோசனப்பட்டது. தவிர, 'கராட்டே கற்பதன் நோக்கம்' பற்றிய கட்டுரைக்கும் மிக்க நன்றி.

**-அஷ்பக் ஜின்னாஹ், MCC வீதி, அக்கரைப்பற்று-20.**

பாலைவனத்தில் வாழும் உயிரினங்களின் தகவல்கள் மிகவும் சுவாரஸ்யமாக இருந்தன.

**-அஃபா முஹம்மத், தரம்-9C, அல்-பலாஹ் ம.வித்.,போரத்தோட்ட.**

நீ அள்ளி வரும் அனைத்து விடயங்களும் எனக்கும் சக மாணவர்களுக்கும் நிறைந்த பயன்களைத் தருகின்றன. 'ஆதிகாலக் குடியிருப்புக்கள்', 'சிங்கராஜ வனம்', 'பாலைவன உயிரினங்கள்' போன்ற ஆக்கங்கள் மிகவும் சுவாரஸ்யமாக இருந்தன. 'பாக்கு உட்கொண்ட மாணவர்கள் மயக்கநிலையில்' என்ற செய்தி மாணவர்கள் எச்சரிக்கையாக இருப்பதற்கு சிறந்த ஆலோசனையாக அமைந்தது.

**-எம்.ஏ.ஸைனப், உயர் தரம்(கலை), பதியுத்தீன் மஹ்மூத் பெ.கல்., கண்டி.**

'கல்வியில் ஊக்கம்', 'பாலைவன உயிரினங்கள்' போன்ற ஆக்கங்கள் மிகவும் பயனுடையவை. 'சிங்கராஜ வனம்' பற்றிய கட்டுரையூடாக அதிகமான தகவல்களைப் பெற்றுக்கொண்டேன். புதன் தோறும் வெளிவந்து நல் ஆசானாய் பல்வேறு விடயங்களைக் கற்றுத் தருகிறாய். உன் சேவை தொடரட்டும்!

**-எஸ்.நந்தினி, பன்சல ரோட், அம்பாக்கோட்டை.**

தரம் 9, புவியியல் பாடப்புத்தகத்தில் இருக்கும் பிழையை சுட்டிக் காட்டி, சரியான வழிகாட்டலை வழங்கியமைக்கு பல கோடி நன்றிகள்.

**-தே.கார்த்தீபன், தரம்-9C, ஹாட்லிக் கல்., பருத்தித்துறை.**

தரம் 9, புவியியல் பாடப்புத்தகத்தில் உள்ள பிழையை தெரியப்படுத்தியமை பரீட்சைக்கு மிகவும் உதவியாக இருந்தது. 'கண்டியரசின் மகுடாபிஷேக பாரம்பரியம்' ஆக்கமானது வரலாற்றுப் பாடத்திற்கு உதவியாக உள்ளது.

**-க.ஹீர்த்திகன், வவுனியா.**

'செவ்வாய் செல்ல ஒத்திகை', 'ஆதிகாலக் குடியிருப்புக்கள்', 'பாலைவன உயிரினங்கள்', 'டொல்ஃபின்', 'கிளியோபெட்ராவின் மூழ்கிய மாளிகை' போன்ற ஆக்கங்கள் என்னை மிகவும் கவர்ந்தவை. ஏனையவையும் பாராட்டுக்குரியவை.

**-மோ.சுலக்ஷி, மாத்தளை.**

'விண்வெளித் தகவல்கள்', 'ஆதிகாலக் குடியிருப்புக்கள்', 'பாலைவன உயிரினங்கள்' பற்றிய கட்டுரைகள் சிறப்பாக இருந்தன.

**-எம்.றாஸிக் (ஆசிரியர்), மனாருல் உலூம் ம.வித். கம்பிரிகஸ்வெவ.**

**இந்த இதழில் (04.08.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 11.08.2010.

**அனுப்ப வேண்டிய முகவரி:**



**வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.**



## குழம்பியுள்ள பழமொழிகளை ஒழுங்கமைக்க — 4

1. கற்கையில்/கற்றபின்/கசப்பு/அதுவே/இனிப்பு/கல்வி

.................................................................

2. கெட்டவனுமில்லை/சொல்லி/மெய்/பொய்/சொல்லிக்/வாழ்ந்தவனுமில்லை


.................................................................

## சரியான சொல்லில் கோடிடுக — 5

*1. பொரியியளாலர்/பொறியியலாளர்/பொறியியலாலர்*


*2. கண்டணம்/கன்டணம்/கண்டனம்*

## ஒவ்வொரு தொகுதியினதும் எண்ணிக்கையை அருகிலுள்ள கட்டங்களில் எழுதுக — 3



## அறிவுக்கு விருந்து 269 விடைகள்

**போட்டி: 1**



*அ) செவ்வகங்கள் - 9*

*ஆ) வட்டங்கள் - 11*

*இ) முக்கோணிகள் - 11*

**போட்டி: 2**

(i) teeth, bee

(ii) pearl, ear, seat

**போட்டி: 4**

*1. நீலநிறம்*

*2. பச்சைக்கொடி*


*3. தேனாறு*

**போட்டி: 5**

1. XIII, XIV, XV, XVI

2. XXXIV, XXXV, XXXVI, XXXVII

## வித்தியாசங்களில் X அடையாளமிடுக — 1






## இடைவெளிகளை நிரப்புக — 2

| | |
|---|---|
| c_oud | ra_n |
| _un | li_htnin_ |
| sn_w | _orn_do |

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 269 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
பி.அஜித்குமார்,
சென்.ஜேம்ஸ் தோட்டம், மேல்பிரிவு, ஹாலி-எல.

**போட்டி: 02**
பஸ்மினா பேகம்,
210, கல்கடுவ, பம்பரதெனிய.

**போட்டி: 03**
சி.நந்தகோபால்,
ஐயனார் வீதி, பருத்தித்துறை.

**போட்டி: 04**
எஃப்.சம்ஹா,
255, நாவின்ன, உலுவிடிகே.

**போட்டி: 05**
ஃபவ்ஜாத் நஸ்லூன்,
50, மயான வீதி, பெரிய நீலாவணை-02.

**பாராட்டுப் பெறுவோர்**

- ஆர்.ஜிஸான், அக்கரைப்பற்று-03.
- ஆர்.இஜாஸ் அஹமட், மூதூர்-05.
- டீ.ரஹ்மி அதாஸ், புத்தளம்.
- நே.வித்யாசாகர், கிளிநொச்சி.
- கே.பிராஸ், திருகோணமலை.
- சாயிமா நஸார், கல்கமுவ.
- நூறுல் ஹம்தா, வெலிகம.
- ஆர்.நவீன், பொகவந்தலாவ.
- எம்.சியாஸ், பலாங்கொட.
- ஆர்.ராஜசேகர், இதல்கஸ்ஹின்ன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வரலாற்றில் சங்கிலி மன்னன்



வரலாற்றுத் தொடர்... 06

அரியாலையூர் சி.சிவதாசன்

மன்னன் பரராசசேகரன் தளர்ச்சி இன்றி மாமுனிவரை வணங்கிப் பின்னர் அரண்மனை நோக்கிச் சென்றான். அந்தநேரம் ஆதவனும் மேற்குத் திசையில் பணிந்து சென்றான். அன்றிரவு முழுவதும் மன்னன் உறங்கவில்லை. சங்கிலி வீரன்தான் விவேகம் நிறைந்தவன்தான், ஆற்றல் மிகப்பெற்றவன்தான், இருந்தாலும் இளையவனான அவன் எவ்வாறு எதிரிகளைச் சமாளிப்பான் என்ற சிந்தனை அவனைச் சூழ்ந்தது. எனினும், மாமுனிவரின் ஆசி இருக்கும்போது எதற்கும் அஞ்சவேண்டியதில்லை என மன்னன் பரராசசேகரன் திடம் கொண்டான்.

மறுநாள் காலை அரச சபையைக் கூட்டிய பரராசசேகர மன்னன், ''சபையோரே! எனக்கு இனிமேலும் அரசாளும் எண்ணமில்லை. என்னை கவலைகளும் வேதனைகளும் புத்திர பாசமும் பெரிதும் வாட்டுகிறது. எனவே, மாமுனிவர் கூறியபடி என் இளைய மைந்தன் சங்கிலியை யாழ்ப்பாண ராச்சியத்தின் அரசனாக முடிசூட்டப் போகிறேன். அது சம்பந்தமாக உங்கள் குறிப்பையும் கருத்துக்களையும் அறிய விரும்புகிறேன். நீதியும் நேர்மையும் உள்ள இந்த மண்ணை சில நீசர்கள் அபரிக்க நினைக்கிறார்கள். வீரம் நிறைந்த சங்கிலி பகைவரை அழிக்கும் வல்லமை நிறைந்தவன். அவன் மன்னனாக வருவதே சிறந்தது. எனவே, உங்கள் முடிவைக் கூறுங்கள்'' என்று கேட்டான்.

அரச மன்றில் இருந்த பலர் இக் கருத்தை ஆதரித்தனர். ஆனால், சங்கிலி அதனை விரும்பவில்லை.



சபையில் இருந்த அதிகமானோர் இக்கருத்தினை ஏற்றுக்கொண்டனர். அனைவரும் சங்கிலி அரசனாவதையே விரும்பினர். இருந்தபோதும் சங்கிலி சபையில் கூறிய கருத்துக்களை புறம்தள்ளவும் விரும்பவில்லை. அத்துடன், மன்னன் பரராசசேகரன் சங்கிலியின் வீரத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையும் வைத்திருந்தான். மாமுனிவரின் ஆலோசனையைப் பெற்ற பின்பு

## சங்கிலியின் கருத்து

அவன் சபையோரை நோக்கி பின்வருமாறு கூறலானான். ''மாண்புமிகு சபையோரே! ஆட்சிபுரியும் ஆசை எனக்கில்லை. எனது மனச்சாட்சிக்கு எதிராகச் செயற்படுவதை நான் ஒருபோதும் விரும்பமாட்டேன். அனைத்து வளமும் நிறைந்த எம் யாழ்ப்பாண மண்ணை வீழ்த்தி அபகரிக்க நீசர்கள் முனைகிறார்கள். வெள்ளம் வரும் முன் அணையிட வேண்டும்.எனவே, வஞ்சகம் புரியும் அந்த வன்னியர் கூட்டத்தை ஒழிக்க வேண்டும். சூழ்ச்சிக்காரரின் சொல்லை நம்பி அண்ணன் பரநிருபசிங்கனை மாசுபடுத்திவிட வேண்டாம். பொய்யன் ஒருவன் உரைப்பதை நம்பி என் சகோதரனை நிந்தனை செய்ய வேண்டாம். அவன் கண்டியிலிருந்து வந்ததும் அவனுக்கே முடி சூடுங்கள். அவன் தலைமையில் படை நடத்தி தீயவரை அழிப்போம்'' என்று கர்ஜனை செய்தான் சங்கிலி.

அவனது உரையைக் கேட்ட சபையோர் வாயடைத்துப் போயினர். பட்டம், பதவி என்றால் எதையும் விட்டுக்கொடுக்காதோர் இருக்கும் அவையில் இப்படியும் ஒருவனா? என மனதுக்குள் வியந்தனர். அவன் மறக்குலத்தில் பிறந்த மாசற்ற வீரன் எனப் புகழ்ந்தனர் பெரியோர்.

அச்சபையில் உள்ள பெரியோர்களில் ஒருவர் எழுந்து ''விவாதிப்பதற்கு நேரமில்லை. சோதிடன் சொன்னதை நாம் பொருட்படுத்தாமையினால் ஈருயிரை இழந்தோம். இனிமேலும் நாம் ஏமாறக்கூடாது. மாமுனியின் சொல்லைக்கேட்ட பின்பும் மரபு வழியைப் பின்பற்ற வேண்டுமென்ற அவசியம் இல்லை. எனவே, சங்கிலியை மன்னனாக முடிசூட வைப்பதே அரச நீதி. அதற்காக நாம் அனைவரும் ஒன்றாகச் செயற்படுவோம்'' என்றார்.

அவனையே அரசனாக்க வேண்டுமென்ற முடிவுக்கும் வந்திருந்தான். சபையோரின் முடிவு சாதகமாக இருப்பதைக் கண்டு தன் முடிவை அவன் கூற ஆயத்தமானபோது ''மன்னா!'' என்றொரு குரல் சபையிலிருந்து கேட்டது.

(தொடரும்..)

### சங்கிலி மன்னன் காலத்து 'யமுனா' ஏரி



சங்கிலி மன்னனின் மாளிகை அமைந்திருந்த 'சங்கிலித்தோப்பு' என்ற வளவில் அமையப்பெற்றிருந்த 'யமுனா ஏரி' எனப்படும் கேணியையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். பகர வடிவில் அமைந்துள்ள இந்த கேணி யாழ்ப்பாண அரசின் முதலாவது அரசனாக கருதப்படுகின்ற கூழங்கை சக்கரவர்த்தியின் காலத்தில் கட்டப்பட்டது என்று கூறப்படுகின்றது. கேணியாக அமைந்திருந்த இதில் 'யமுனா' நதியின் நீர் கலக்கப்பட்ட காரணத்தால் இது 'யமுனா' ஏரி என்று அழைக்கப்பட்டது.

## மணக்கும் சினிமா



ஜப்பானிய ரசிகர்கள் சினிமா பார்க்கும்போது காட்சிக்கு ஏற்ப விநோத வாசனைகளை முகரும் அனுபவத்துக்குள்ளாகின்றனர். பிரபல தொலைபேசி நிறுவனமொன்று படத்தில் வரும் காட்சிகளுக்குப் பொருத்தமாக ஏழு வித்தியாசமான வாசனைகளை திரையரங்குக்குள் பரப்பும் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

திரையரங்கின் கடைசி மூன்று வரிசைகளில் உள்ள இருக்கைகளுக்கு அடியிலிருந்து அந்த வாசனைகள் பரப்பப்படுகின்றன. மகிழ்ச்சியான காட்சிக்கு மலர்களின் வாசனையும் சோகக் காட்சிக்கு 'பெப்பர்மின்ட்' மற்றும் ரோஸ்மேரியின் கலவையான வாசனையும் பரப்பப்படுகின்றன.

## பிளாஸ்டிக் போத்தல் கப்பல்

பிளாஸ்டிக் போத்தல்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட 'பிளாஸ்டிக்கி' என்னும் பாய்மரக் கப்பல் பசுபிக் பெருங்கடல் ஊடாகப் பயணம் செய்து 8,000 மைல்களைக் கடந்து கடந்த வாரம் திங்கட்கிழமையன்று அவுஸ்திரேலியாவின் சிட்னி துறைமுகத்தை வந்தடைந்தது.

பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலேயே இந்தக் கப்பல் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கப்பலை உருவாக்குவதற்கு 12,500 பிளாஸ்டிக் போத்தல்கள் பயன்படுத்தப்பட்டன.

கடந்த மார்ச் 20 ஆம் திகதியன்று சென்.பிரான்ஸிஸ்கோவிலிருந்து புறப்பட்ட இக்கப்பல் பல்வேறு நாட்டு துறைமுகங்களிலும் தரித்து நின்று சூழல் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரத்தை மேற்கொண்டது.

'பிளாஸ்டிக்கி'ன் உத்தியோகபூர்வ இணையத்தள தகவலின்படி, இந்தக் கப்பலில் 130 நாள் பயணத்தின்போது 10 மாலுமிகள் பணியில் ஈடுபட்டனர். பூமி வெப்பமடைதல் தொடர்பான கைநூலை எழுதிய டேவிட் ரொத்சைல்டின் தலைமையில் இக்குழு பயணத்தை மேற்கொண்டது.

இப்பயணம் பற்றி ரொத்சைல்ட் கூறுகையில்; ''கடந்த 2006 ஆம் ஆண்டு அமெரிக்காவில் காற்று மாசடைதலில் பிளாஸ்டிக் பொருட்களின் பங்குபற்றி ஒரு செய்தியைப் பார்த்தேன். அதன் விளைவாக பிளாஸ்டிக் பொருட்களின் தீமை குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவே இந்தக் கப்பல் தயாரிக்கப்பட்டது. இதில் அதிக அளவு பிளாஸ்டிக் குளிர்பானப் போத்தல்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை மறுசுழற்சி செய்து இந்த கப்பலை உருவாக்கினோம்'' என்று கூறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கணினியில் வோல்பேப்பரை அமைக்கும் வழிமுறை

கணினியில் முதல் தடவையாக விண்டோஸ் செவன் 'இன்ஸ்டோல்' செய்யும்போது நமக்கு அவசியமான பாஷை, நேர வலயம் போன்ற விபரங்களை வழங்க வேண்டி ஏற்படுவதுண்டு. இவை வழங்கப்பட்ட பின்னர், அவற்றை அடியொட்டி வோல்பேப்பர்ஸ் மற்றும் தீம்ஸ்களின் சேர்வையும் கணினியில் பதியப்படும். ஆனால், பொதுவாக வழங்கப்படுகின்றவற்றில் தீம்ஸ் மற்றும் வோல்பேப்பர்ஸ் சிறிதளவே காணப்படுவதுண்டு. ஏனையவை மறைந்து காணப்படுவதுண்டு. இவற்றை தமது விருப்பிற்கமைய பின்னர் சேர்த்துக்கொள்ள முடியும்.

இவ்வாறு மறைந்து காணப்படுகின்ற வோல்பேப்பர்ஸ் மற்றும் தீம்ஸ் ஆகியன வெவ்வேறு நாடுகளுக்குப் பொருந்தக்கூடிய வகையிலேயே வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது, அவுஸ்திரேலியா, கெனடா, பிரிட்டன், அமெரிக்கா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் கீழே இவை இவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

விண்டோஸ் செவன் இன்ஸ்டோல் செய்யும்போது அதில் பாஷையாக English (US) என்று வழங்கினோமாகில் வோல்பேப்பர்ஸ், தீம்ஸ் ஆகியனவாக அமெரிக்காவில் பல்வேறு காட்சிகளை அடியொட்டி அமைக்கப்பட்ட வோல்பேப்பர்ஸ், தீம்ஸ்கள் கிடைக்கப்பெறும். இவற்றை நீங்கள் விரும்பவில்லையாயின், மறைந்து காணப்படுகின்ற வோல்பேப்பர்ஸ், தீம்ஸ் ஆகியனவற்றைப் பெறமுடியும். அதனை பெறும் முறை வருமாறு;

ஸ்டார்ட் மெனுவில் சேர்ச் பொக்ஸில் C:/Windows/Globalization/MCT என்று டைப் செய்து கீபோர்ட்டில் Enter பகுதியை அழுத்தவும். விண்டோஸ் செவன் இன்ஸ்டோல் செய்திருப்பது C: பார்ட்டிஷனில் இல்லையாகில் மேற்காணப்படும் கட்டளை வார்த்தைகளில் C: க்குப் பதிலாக விண்டோஸ் செவன் உள்ள பார்ட்டிஷனில் டிரைவ் லெட்டரை எழுதுதல் வேண்டும். அப்போது C:/Windows/Globalization/MCT:MCT-AU, MCT-CA, MCT-GB, MCT-US மற்றும் MCT-ZA ஆகிய சப்(இணை) ஃபோல்டர்களின் பட்டியல் விண்டோஸ் எக்ஸ்ப்ளோரரில் காட்சி தரும். இந்த ஒவ்வொரு சப்ஃப்ஃப்ளோடரிலும் நாடும் அதன் கீழான வோல்பேப்பர்களும் காணப்படும். அதன்படி MCT என்ற எழுத்துக்களுக்கு அடுத்தபடியாக உள்ள இரட்டை எழுத்துக்கள் நாடுகளைக் குறிக்கின்றனவாக இருக்கும். அதாவது, AU அவுஸ்திரேலியாவையும், CA கெனடாவையும், GB பிரிட்டனையும், US அமெரிக்காவையும், ZA தென்ஆபிரிக்காவையும் குறிக்கும்.

தற்போது இந்த குறித்த நாடுகளில் உங்களுக்குத் தேவையான நாட்டையும் அதற்கான ஃபோல்டரையும் தெரிவு செய்யுங்கள். உதாரணத்திற்கு தென் ஆபிரிக்காவிற்கு சம்பந்தமான தீம்ஸ் வோல்பேப்பர்ஸ் தேவையாயின், C:/Windows/Globalization/MCT/MCT-ZA/Theme என்ற ஃபோல்டரை ஓப்பன் செய்யுங்கள். அப்போது, அதில் தெரிகின்ற தேவையான தீம்ஸ்களில் 'டபள் க்ளிக்' செய்யுங்கள். அப்போது உரிய தீம்ஸ், வோல்பேப்பர்ஸ் ஆகியனவற்றிற்கான ஷோர்ட்கட் ஒன்று கண்ட்ரோல் பெனலில் Personalization உடன் இணையும். இப்போது அந்த தீம்ஸ், வோல்பேப்பர்ஸ்களை வழமைபோல் பயன்படுத்த முடியும். இதற்கு 'டெஸ்க்டொப்பில்' ரைட் க்ளிக் செய்யும்போது திரையில் தோன்றும் Personalization என்பதை தெரிவு செய்து தேவையான தீம்ஸை அல்லது வோல்பேப்பரை செலக்ட் செய்து கொண்டால் அவற்றை அடைந்துவிட முடியும்.










இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, ஒகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday August 04, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org